உ

ஸ்ரீராமநாதசுவாமிசகாயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-ஞானசம்பந்தப்பெருமான் திருவடிவாழ்க.

ஸ்ரீ-ல-ஸ்ரீ நமது சோமசுந்தரநாயகரவர்கள் பாஹ்யசமய நிராகரணமும், வைதிகசைவசித்தாந்த ஸ்தாபநமுமாகிய சிவபுண்ணியத்தை அதிக வூக்கத்துடன்செய்துவரும் நன்மையறிய யாம் பல பத்திரிகைவாயிலாகவும், பலநூல்களின்வழியாகவும், பிரசங்கமூலமாகவு மறிந்தின்புற்றதற்கறிகுறியாக ஷை நாயகரவர்களுக்கு நமது சேது சமஸ்தானத்தின் கௌரவபூஷணமாயுள்ளதும், விஜய சூசகமானதுமாகிய (அச்சமஸ்தானநாமம் விளங்கப்பெற்ற) தங்கத்தோடாவொன்றும், வைதிக சைவசித்தாந்த சண்டமாருதம் என்னும் பட்டப்பெயரும் இப்பத்திரிகை வாயிலாகக் கொடுக்கலாயினேம்.

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அவர் மனைவி
திருமதி சியாமளா அருணாசலம்
(1982)

| | |
|---|---|
| விஜயநாமசம்வற்சரம்<br>இடபரவி 6௳<br>திருவாலவாய். | விஜயரகுநாத<br>பாஸ்கரசேதுபதி. |

THE MADRAS HINDU ROYAL PRESS.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்தபரப்ரஹ்மணே நம:

# ஞானஸம்பந்தபாரத்வநிரூபண

இஃது

"வைதிகசைவசித்தாந்த சண்டமாருதம்,,

ஸ்ரீலஸ்ரீ

சோமசுந்தரநாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை

வேதாகமோக்தசைவசித்தாந்தசபையாரால்

ஸ்ரீமட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்தில்

பதித்து வெளியிடப்பட்டது.

MADRAS.

1893.

T. 672

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தபரப்ரஹ்மணேநம:

# ஞாநஸம்பந்தபரத்வநிரூபணம்

## காப்பு.

ஓமெனும்பதத்துள்ளொளியாயுறைவானை
மாமறைப்பொருள்வண்டமிழ்தன்னில்வைத்தானைச்
சேமவைப்பெனத்திகழ்திருஞானசம்பந்த
நாமசற்குருநாதனைநயந்துவாழ்த்திடுவாம்.

## நூல்.

அங்காவ்யயாத்யநந்தமாங்கல்ய குணகணமணிஜலதியாய் விளங்கும் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தப்பெருமானது மகிமை வேதமுதலிய கலைகளிற் பெறப்பட்டிருக்கின்றது. அதனையெடுத்து யாமும், எம்மவரும் "ஆசாரியபிரபாவம், ஞானபேதவிளக்கம், ஞானசதுஷ்டயதர்ப்பணம், ஞானபேதத்தெளிவு, ஞானபேதத்துணிவு, ஞானபேதவிளக்க நியாயரக்ஷாமணி" முதலிய நூல்களில் இனிது பிரகாசப்படுத்தியிருக்கின்றோம். இந்நூல்களை விசாரித்துணர்ந்தவர்கள் எமது காழிப்பெருந்தகையையே பரமபதியெனக்கொண்டு வழிபடாநிற்பர். இவ்வருளாளரது வாய்மைநலமுணரப்பெறாதார் தத்தமக்கியைந்தவாறு கூறி யிடர்ப்படுவர்

இக்காழிப்பெருந்தகையைப் "பிள்ளையார்" என்று உலகங்கொண்டாடித்துதிக்கின்றது. இப்பிள்ளையாரென்னும் பெயர் சிவனாரது திருக்குமாரர்களுக்கே சிறந்தது. இவர்களை மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார் என்று மேலோர் துய்த்துணர்க. மூத்தபிள்ளையார் விநாயகக்கடவு

ளூம் இளையபிள்ளையார் முருகக்கடவுளுமாவர். ஆயின், விநாயகரது கோயிலைப் பிள்ளையார்கோயில் எனவும், விநாயகசவிதியைப் பிள்ளையார்சவிதியனவும் உலகில் வழங்கிவருவதுபோல் முருகக்கடவுளிடத்து வழங்காத தென்னையெனின், நன்றுகடாவினுய். குமரன்கோவில், குமாரஷஷ்டியென்று உலகில் வழங்கிவருமாறு என்னே? சிவனாது பிள்ளையெனவும், சிவனாது குமாரரெனவும் முறையே அவ்விருவருந் துதிக்கப்படுகையால, முருகக்கடவுளது கோயிலைப் பிள்ளையார்கோயிலென்று வழங்காததும், விநாயகரது கோயிலைக் குமரன்கோயிலென்று வழங்காததுங் குற்றமாகாதென்க. இடத்துக்கேற்ப முருகக்கடவுளைப் பிள்ளையார் என்பதும், விநாயகக்கடவுளைக் குமாரர் என்பதும் சர்வஸம்பிரதிபந்தமாயிடுதல் காண்க. இவ்வுண்மைபோதரவே ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் "தவம்பெருக்குஞ்சண்பையிலே தாவில் சராசரங்களெல்லாஞ், சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்." என்று இளையபிள்ளையாராகிய முருகக்கடவுள் திருவவதாரஞ்செய்ததைக் கூறியருளினர். ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் பிள்ளையார் என்றதேயன்றி, இளையபிள்ளையார் என்றதின்றெனின், நன்றுகூறினுய். இச்சேக்கிழார்பெருமானுக்கு முதனூலாசிரியராகிய நம்பியாண்டார்நம்பிகள் அந்தப்பிள்ளையா ரிவரென்பதுதோன்ற, "மயிலேந்தியவள்ளல்" என்று பூர்வமே கூறியுள்ளாராகையால் அவ்வாசங்கை விட்டொழிந்ததென்க.

இனி எமது ஞானசம்பந்தவள்ளலைப் பரமபதியென்று போதிக்கும் பிரமாணவசனங்கள் பலவுள. அவை யாம் பூர்வம் வெளியிட்டிருக்கும் "ஞானசதுஷ்டயதர்ப்பண"த்தில் உதகரிக்கப்பட்டிருக்கின்றன,

அவற்றுள்,

1. "பதியானஞானமுனிவன்"
2. "சுற்றுமுற்றுமாயினுன்"

என்னும் வாசகங்கள் பிள்ளையாரது திருவாக்காயுள்ளவை. இவற்றுள். "பதி" என்பது பாசங்களைக் கடந்தமையையும், "ஞானமுனி" என்பது சர்வஜ்ஞத்வ முடைமையையும், "சுற்றுமுற்றுமாயினன்" என்பது சர்வவியாபகத்வ முடைமையையும் பிள்ளையாரிடத்து நிலைபெறுவித்தன. வேதத்தில், அதனை யாக்கியோராகிய சிவபெருமான் "சங்கரோபகவானுத்யோ - ராக்ஷஸகலா:ப்ரஜா:" என்று தமது பெருமையையெடுத்துக் கூறுமாபோலவே பிள்ளையார் தாமருளிச்செய்த தேவாரத்தில், தமது பெருமையை யெடுத்து இனிது விளக்கினாரென வறிக.

ஈண்டெடுத்துக்கொண்ட "பதி" என்னுஞ் சொல்லையே ஸ்ரீசேக்கிழாரபெருமான்

"ஒருபிறப்புமெய்தாமையுடையார்"
"ஈறிலாத்திருஞானசம்பந்தர்."

என்னும் பிரயோகங்களாலினிது பிரகாசப்படுத்தியருளினர். பிறவாமையும் இறவாமையுமே பதியினது முக்கிய விலக்கணமாகையா லவ்விலக்கணமுடையார் பிள்ளையாரெனல் இனிதுபெறப்பட்டது. பாசவீக்கமுடைய பசுக்களுக்கே பிறப்பிறப்புகள் நூல்களிற் கேட்கப்படுகின்றன. எமது பிள்ளையார் பாசவீக்கமுடையா ரல்லரென்பது போதரவே ஸ்ரீசேக்கிழார்பெருமான் "பாசம் - மற்று - இலர்" என்று பிர[illegible]ங்கித்தருளினர். இதனை யெமது தர்ப்பணத்தில் யாம் நன்கு விளக்கியிருக்கின்றோம். பாசவீக்கமும், அதனுலுண்டாகத்தக்க பிறப்பிறப்புகளும் பிள்ளையாரிடங் கேட்கப்படாமையால், அப்புகலிப்பிள்ளையார் பிறந்திறவாத பெரியபெருமானுயினுரெனல் சித்தமாயதுணர்க.

இனி,

1. "எல்லார்பிறப்புமிறப்புமியற்பாவலர்தஞ்
சொல்லாற்றெளிந்தேம்"

2. "செத்துப்பிறக்கின்றதெய்வங்கண் மணவாள"
3. "பிறந்திறக்குந்தெய்றப்பிணங்கள்"
4. "உதியாமரியாவுணராமறவ - விதிமால்"
5. "செத்துசெத்துப் பிறப்பதே தேவென்று."

என்னும் பெரியோர் திருவாக்குகள் பிறந்திறக்கும் பீழையுடையார் பதிப்பொருளாகாரென நிருவியவாறுணர்க. ஈண்டுக்கூறிப்போந்த தெய்வங்களுட் டலேவராய விட்டுணுவுக்குச் சிவசாரூப்பியப்பேறு எமது காழிப்பெருந்தகையேயன்றோ பிரஸாதித்துய்வித்தருளினர்? இதனானும் அவர் பதிப்பொருளாயினாரெனல் ஸர்வசம்பிரதிபந்நமாயிற்று. இதனை விரித்துரைக்கின்றாம்.

விஷ்ணுமூர்த்தி சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்து, அவர் வெளிவந்தபோது தேவரீரது சாரூப்பியம் அடியேனுக்கருளல் வேண்டுமென் றிரந்தனர். சிவபெருமான் விஷ்ணுவைநோக்கி, அது இனிக் குகனுடைய அவதாரமாய்வரும் என்னுடைய அடியவனாகிய ஞானசம்பந்தனாலுனக்குக் கிடைக்கும் என்று அநுக்கிரகித்து மறைந்தருளினார். அவ்வாறே முருகக்கடவுள் ஞானசம்பந்தரா யவதரித்து விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பிய மளித்தருளினர். இதில், யோசிக்கத்தக்கதொன்றுளது. என்னெனின், சிவசாரூப்பியத்தை ஆன்மாக்களுக்குச் சிவனார் கொடுத்திடலே நியதம். சிவபெருமானே ஒப்புயர்வில்லாதவர். ~~சம்பந்தப்~~ பிள்ளையாரை யொரு பசுவாகக்கொண்டால் அவர் பதியாகிய சிவபெருமானோ டொத்தவரு முயர்ந்தவருமாகார். சம்பந்தர் ஒரு பசுவும், விஷ்ணுவோர் பசுவுமாகையால், பசுவாகிய சம்பந்தர் தம்மோடொத்த பசுவாகிய விஷ்ணுவுக்குப் பதியினது சாரூப்பியத்தை யளித்த லஸம்பாவிதமாம். அரசனிடம் அடிமைவேலைசெய்யுமொருவன் தன்னையொத்தவொரு சாமானியனை அரசனாக்கிவிடுதல் கூடுமோ? மந்திரியினாலேயே அது முடியாத காரியமன்றோ? அதனை அர

சகுமாரன் செய்துமுடித்தானெனல் ஆசங்கைக்கிடஞ் செய்யாதென்க. இதனைப் பரியாலோசிக்குங்கால், சிவகுமாரராகிய சம்பந்தப்பிள்ளையார் தமது பிதாவினது சாரூப்பியத்தை விஷ்ணுவுக்களித்தது அவர் பசுவல்லவென்பதனையே கிறுத்தியதுணர்க. என்னை? பெற்றான்சாம்பனுக்கு உமாபதிசிவம் முத்திகொடுத்தருளினு ரென்பதெனின், நன்று கூறினாய். பெற்றான்சாம்பனது முத்தி சிவசாரூப்பியமன்று. அது சாமானிய முத்தியென்றுணர்க. அதனை முத்தியெனலுபசாரமேயாமென்க. அம்முத்தியினைச் சாரூப்பியத்தினும் மேலிட்ட சாயுச்சியமென்று கொண்டா லமையாதோவெனின், சாயுச்சியம் சிவபெருமானோடு கலந்தொன்றாயிடுதல். அது சிவபரஞ்சுடரான்மாத்திரமே அருளத்தக்கது. உமாபதிசிவம் பெற்றான்சாம்பனது ஆன்மசைதன்யத்தைச் சிவசைதன்யத்தோடு கலப்பித்து ஒன்றுபடுத்தினதின்று. அவ்வுமாபதிசிவம் "வினைப்போகமேயொரு தேகங்கண்டாய்வினை தானொழிந்தாற், றினைப்போதளவுநில் லாதுகண்டாய்" என்பதுணர்ந்து பிராரத்தவொழிவை யெதிர்நோக்கித் திருவருள் வழிநின்று சிவாநுபூதியிற் செறிந்து விளங்கினாரெனின், அவரதுகாறுந் தமக்குக் கைவல்யமாகாத உண்மை முத்தியைப் பெற்றான்சாம்பனுக்கு அளித்தாரென லெங்ஙனே மணம்பெறும்? சம்பந்தரொருபசுவும், உமாபதிசிவமொருபசுவுமாகக்கொண்டு இவ்விருபசுக்களும் விஷ்ணுவுக்கும், பெற்றான்சாம்பனுக்கும் முத்தி கொடுத்தார்களென்று நாம் கொள்வோமாயின், முத்திநாதன் சிவபெருமானென்ப தழிந்து பசுக்களே பசுக்களுக்கு முத்திகொடுக்கு மியல்பினவென்னும் பிரசங்கந் தலைதூக்கும். ஆயின், முத்திபெற்றவான்மாக்கள் பஞ்சகிர்த்தியஞ்செய்யும் என்று சிலர் கூறுவது என்னையெனின், "உம்பர்பிரானுற்பத்தியாதிகளுக்குரிய - வுயிர் தானுஞ்சுவானுபவ மொன்றினுக்கு முரித்தே" என்னும் பிரமாணவசனத்தா லது கிரஸ்தமாயினதுணர்க. அன்றியும், உயிர்கள் ,முத்தித்தசையில் பஞ்சகிர்த்தியஞ் செய்யுமென்று

நாமொப்பின், சிவபெருமான் செய்யும் பஞ்சகிர்த்தியத்துடன் முத்தான்மாக்களது பஞ்சகிர்த்தியமும் ஒரேகாலத்தில் ஜீவியாகிற்கும். அங்ஙனங்கொள்வோமாயின், சிவனுர்செய்யும் பஞ்சகிர்த்தியத்தையே முத்தாத்மாக்கள் பகிர்ந்துகொள்ளுகிருர்களென்று சொல்லவேண்டிவரும். அம்முத்தாத்மாக்களொருவர்பின் ஞெருவராகப் பலர் பஞ்சகிாத்திய கர்த்தர்களாய் வந்துகொண்டிருப்பாராயின் சிவனுரது பஞ்சகிர்த்தியம் என்னுய் முடிவது? சிவபிரானுரது பஞ்சகிர்த்தியம் அவரது சங்கற்பமாத்திரத்தானே நடப்பது இதனைச் செய்யவேண்டியதற்கு அவருக்கொரு பிரயத்தினமுமின்று. சந்நிதிக்கே யஞ்சு தொழிலாம். இதற்கு ஏனே பலகர்த்தர்கள் வேண்டும்? கர்த்தாக்கள் பலர் வேண்டப்படாமையால், முத்தாத்மாக்களிடத்துப் பிரயோஜனப்படாமற்போகத்தக்க பஞ்சகிர்த்தியப்பிரசங்கம் நிஷ்பலமாயினதறிக. அன்றியும் அம்முத்தாத்மாக்களுக்குப் பஞ்சகிர்த்திய மொப்பிய நாம் பரமபதியாகிய சிவபெருமானையும் ஒரு முத்தாத்மாவாகவே கொள்ளவேண்டிவரும். முத்தாத்மாக்களுக்குக் கௌரவங்கற்பிக்கத்தொடங்கி முதற்பொருளுக்குக் குறைவு தேடுவது பாஷண்டமதமாய் முடிதலின், அது ஸாதுக்களுக்கு அறவேதியாஜ்யமென்க. இதுகாறும் கூறிய நியாயங்களால் பசுக்கள் பசுக்களுக்கு முத்தியளிக்கும் யோக்கியதைபெருவெனவும், உமாபதிசிவம் பெற்ருன்சாம்பனுக் களித்தது பதமுத்தியெனவும் வெளிப்பட்டமையால், ஞானசம்பந்தர் விஷ்ணுவுக்களித்த முத்தியை இதனேடு சேர்த்தெண்ணுதல் கூடாதென்க, ஞானசம்பந்தர் சிவகுமாரராகிய பதிப்பொருளாயினமையா லவரிச் சிவசாரூப்பியமேயன்றிச் சிவசாயுச்சியப்பேறு முயிர்கட்களிக்கும் பெற்றியுடையாரெனல் சித்தமென்றுணர்க. "காழியிலேவந்து கணக்கிலாச்சிவரைநீ - ழேியின்பத்துய்த்தவொருவனே" என்னும் பிரமாணத்தால், பிள்ளையா ரெண்ணிறந்த வுயிர்களுக்குச் (சிற்சோதியிற்புக்கொன்ருயிடுதலாகிய) சிவசாயுச்சியப்பேறு அளித்தனரொன்னு முறுதிப்பாடு வெளியாயதுணர்க. பிள்ளையாரளி

த்ததுசிவசாயுச்சியப்பேருகிய வுண்மைமுத்தி யென்பதுபோ தரவே "நிலவுமுருகர்க்கு நீலநக்கர்க்கு, தொலைவில்புகழ்ச்சிறுத்தொண்டர்க்குங் - குலவிய, தோழமையாய்த்தொல்லைப் பிறப்பறுத்தசுந்தரனை" என்று நம்பியாண்டர்நம்பிகள் இனிது பிரகாசப்படுத்தியருளினர். அன்றியும், பிள்ளையாரெலும்புக் குயிர்கொடுத்ததும், பெண்பனையை ஆண்பனையாக்கியதும், பாம்பின்விடமாற்றியதும், ஏனைய அற்புதமியற்றியதும்அவர் பதிப்பொருளாயிற்றலையே போதருவித்தனவென்க. இவ்வுண்மையால், பிள்ளையார் விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பிய மளித்தாரெனல் சித்தார்தமாயிற்று. தேவர் தானவர், மானவர் முதலிய யாவரும் பசுக்களேயாயினும், இவருட்சிறந்த தேவரினத்தில் விஷ்ணுவை பிரஸ்தாபித்து, பரப்பிரமம்-பரஞ்சோதி என்று வேதங்கள் விதந்திடும். இத்தகையவிசிட்டபுருடர்க்குச் சிவசாரூப்பியமளித்திடல் இவரினுங் கீழிட்டவுயிராலாவது, மேலிட்டவுயிராலாவது, இவருக்குச் சமானமானவுயிராலாவது கூடுமெனல் அஸம்பாவிதமேயாமென்க. இவரை வேதம் புகழ்ந்ததுபோல வேறு ஒரு உயிரையுமெடுத்துப் புகழ்ந்து துதித்ததில்லை: விஷ்ணுவைப்போல் சம்பந்தரும் ஒரு பசுத்தானென்றுகொண்டால், விஷ்ணுவாகிய பசுவைநோக்கச் சம்பந்தராகிய பசு உயர்ந்தவராகார். வசிட்ட பராசர வியாச நாரதாதி பசுக்களுக்குஞ் சம்பந்த ருயர்ந்தவராகார். இவ்வாறு துங்கத்தக்க சம்பந்தர் விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பிய மளித்தாரெனல் கட்டுக்கதையாகவே முடியும். யாம் கொண்டவாறு அவரைப் பதிப்பொருளென்று கோடலே அவர் விட்ணுவுக்குச்சிவசாரூப்பிய மளித்தமையை நிலைபெறச்செய்யும்.

இனிச் சம்பந்தப்பிள்ளையாரை வேதம் பதிப்பொருளென்று சாதித்ததுண்டோவெனின், நன்றுகடாயினை. இராமனை முன்னும், கிருஷ்ணனைப் பின்னும் இன்பப்பேறு வேண்டி யாச்சிரயித்த பதினறுயிர மிருடியரை வேதம் பிரஸ்தாபித்து, அவ்விருடியருக் கவரா லின்பமுண்டாகவில்லை

யென்று கூறினமையா லவ்விருடியர் பதினாறாயிரவரும் பிள்ளையாரது திருவடியையாச்சிரயித்தின்புற்றொன்னு மதனது ஹருதயம் வியக்தமாகியது. இதனை ஆசாரியப் பிரபாவத்தினிது பரிஷ்கரித்திருக்கின்றோம், ஆண்டுக்கண்டுணர்க. வேதத்தில், காழிப்பிள்ளையாரை வெளிப்படையாக வோதாததென்னையெனின், வேதம் அநந்தமாகையால், அதிற் கூறவில்லையென்றது குணஞ்செய்யாது. அதவா கூறாதவிடத்துந் தோஷமுண்டாகாது. எங்ஙனமெனின் தடாதகையாரை வேதங்கூறியதா? சோமசுந்தரக்கடவுளை வேதங்கூறியதா? எல்லாம்வல்லசித்தரை வேதங்கூறியதா? இன்னோர் கூறப்படாமையாலிவர்களை வேதம் புகழ்ந்திடும் பரமகாரணர்களாகாரென் றொதுக்குதல் மரபாமோ சிவனாரது திருவிளையாடல்களி லொரு திருவிளையாடலாக ஆவிர்ப்பவித்துப் பாண்டியனுக்குச் சுரந்தீர்த்தும், சமணரைக்கழுவேற்றியு மநுக்கிரகித்தருளிய (ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானாகிய) சம்பந்தமணியைப் பதிப்பொருளென்று துணிந்திடலே சர்வசிஷ்டஜந சம்மதமாமென்றுணர்க. இதுநிற்க.

எமது பிள்ளையாரைப் பதியெனக் கோடற்குச் சேக்கிழார் பெருமான் விதந்தருளிய ("ஒருபிறப்புமெய்தாமையுடையார்-ஈறிலாத்திருஞானசம்பந்தர்" என்னும்) பிரயோகங்களில், "ஒருபிறப்புமெய்தாமையுடையார்" என்பதற்குப் பிறப்பில்பெருமான் என்று பொருள்கூற விசையாது பிணங்கிய பேயர் தம்மருளைப் பேதித்துப் பூர்வமே யெமது தர்ப்பணத்திற் பிரகாசப்படுத்தியிருக்கின்றோம். ஏனைய "ஈறிலாத்திருஞானசம்பந்தர்" என்பதற் கவர் கூறிய வீனஞானததையு மீண்டுப் பெயர்த்தெறிவாம். அவர் "ஈறிலா"என்பதைச் சம்பந்தருக்கு விசேடணமாகக் கொள்ளாமல் அதனை ஞானத்திற்கு விசேடமாகக்கொண்டு, அழியாதஞானத்தையுடைய சம்பந்தர் என்று பொருள்கூறித் தமதறிவி னகலத்தைப் பரப்பாநிற்பர். திருஞாநசம்பந்தர் என்பது பிள்ளையாரது திருநாமமாயினமையா

லதனைச்சிதைத்து மருளான் மடிந்திடார் மாபழிந்தாரென்க. இனி, அதற்கு அழியாத திருஞானசம்பந்தர் என்று பொருள் கோடலே யமைவுடைத்தென்க. வேதங்களிற் பேறப்படுஞ் சிவபெருமானதுயர்வைப் பாஞ்சராத்திரிகள் கெடுத்துப் பாழாக்கத் தலைப்படுமாறுபோலப் பிள்ளையாரதுயர்வைக்கெடுத்துப் பாழாக்கமுயலுத லமண்கரந் துறைவார்க்கே யாக்கப்பாடாயதென்க. தமது பாவத்தா லவர் பழியுரை பகர்ந்தாரேனும்' அது பண்டிதரவைக்கட் பரிபவமுறுது கனம் பெறுமாறில்லை. எமது பிள்ளையார் ஈறிலாதவரென்பதனை "ஆன சீர்த்-தத்துவனை நித்தனைச் சைவத்தவரரசை" என்று நம்பியாண்டார்நம்பிகளருளிய திருவாக்கில், "நித்தனை" என்று நிலைபேறுயுள்ள பிரயோகம் ஊர்ஜிதப்படுத்திவிட்டவாறறிக. தத்துவன் என்றும், நித்தன் என்றும் பிரதிபாதிக்கப்பட்ட பரஞ்சுடர்ப் பெருமானைப் பசுவென்று சாதித்தற்கு முத்துலைபோட்டுவருந்துதல் பாவிகளுக்கேயன்றோ சிறக்கும்? விரிக்கிற் பெருகும்.

இதுகாறுஞ் செய்த விசாரத்தால் "பதியான ஞானமுனிவன்" என்பதில் "பதி" என்னுஞ் சொல்லுக்கு உண்மை முடிவெடுத் திசைத்தோம். இனி "ஞானமுனிவன்" என்பதனையுஞ் சிறிதாராய்ந்து முடிவுகூறுவாம். பிள்ளையார் தம்மை "ஞானமுனி" என்று கூறினமையால், அது "சின்மாத்ரோஹம்ஸதாசிவ:" என்று சிவனார் கூறிய சுருதிபோல்வதாயிற்று. சதாசிவமூர்த்திதம்மை ஞானவிக்ரஹம் என்று கூறிக்கொண்டமையாலிவ்விருமூர்த்திகளு மொருமூர்த்தியென்பதே சித்தமாயிற்று. சிவபெருமான் கீர்வாண சுருதிலும், சம்பந்தப்பெருமான் திராவிட சுருதியிலுங் கூறிய சொரூப வொருமையைச் சிந்தித்துணர்வார்க்குப் பிள்ளையாரிடம் விபரீத புத்திபண்ணி இடமுண்டாகாதென்க. சம்பந்தரை முனியென்பது யாங்ஙனமெனின், அது ஞானத்தின் வரம்பு கண்டுரை செய்தபடியாம். அதற்கு "மோனமென்பது ஞானவரம்பு" என்று

போதிக்கு மமுதவுனா சான்றுதலறிக. இம்மோனஞானமூர்த்தி ஸ்ரீதக்ஷிணமூர்த்தியாயிடுதலானும், இச்சிவமூர்த்தியை "விச்வாதிகோருத்ரோமஹர்ஷி:" என்றுவேதங்கூறி, மஹர்ஷித்வத்தை அவர்க்கறுதியிட்டுரைத்தாலானும், இச்சிவமூர்த்தியில் வேறாகாது விளங்குஞ் சம்பந்தமூர்த்தி தம்மை ஞானமுனியென்றது சால்புடைத்தேயாமென்க. இவ்வுண்மையை விளக்கவே ஸ்ரீநம்பியாண்டார்நம்பிகள் "ஞானச்சுடர்விளக்கை" எனவும், ஸ்ரீசேக்கிழார்பெருமான் "ஞானத்தின்றிருவுருவை" எனவும் பிள்ளையாரது பெருமைதோன்றக் கூறினார்கள். அன்றியும், அப்பிள்ளையார் வேதகாரணராய சேதனவிக்ரஹமென்பதை நம்பியாண்டார்நம்பிகள் "மானமறையவற்றின்வான்பொருளை" எனவும் கூறிப் பிரகாசப்படுத்தினார்கள். இவ்வளவிலமையாமல் ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் 'அந்தணர்க்கெலாமருமறைப்பொருளெனவந்தார்" எனவும், "கலைமறையோர்கவுணியனார்தம்மைக்கண்முன் - வருதியானப் பொருளென்றிறைஞ்சி" எனவு மினிது விளக்கிப் பிள்ளையார் சுத்தசேதனவிக்ரஹமாதலை ஸ்தாபித்தருளினர். இத்யாதி பிரமாணங்களால் எமது சம்பந்தநாதனை சர்வஜ்ஞமூர்த்தியென்று கோடலே நியதமாயிற்று.

### ஹாலாஸ்யமாஹாத்மியம்.

1." ஸ்வாமிந்ஸர்வஜ்ஞமந்நாத - ஜகந்நாதஜகத்குரோ
2." பத்ராஸநம்ஸமாரோப்ய - பத்ராகாரம்ஜகத்குரும்"

என்றுகூறுகின்றது. இவற்றுள், பிள்ளையார் சர்வஜ்ஞரெனல் வியக்தமாயிற்று. அன்றியும் சுவாமி எனவும், ஆத்மநாதரெனவும், உலகநாதரெனரும், லோகாசாரியரெனவும், மங்களமான ஆஸநமுடையவரெனவும், திவ்ய மங்கள தேஜோவிக்

ரஹமெனவும் அவ்வமுதப்பிரானுர் துதிக்கப்பட்டிருக்கின்ற னர். லோகசாரியனென்பது இரட்டித்துச் சொல்லப்பட்டிருக்கின்றது. பரமபதியும், பிறந்திறவாத பெரியபெருமானும், சர்வஜ்ஞப்பிரபுவுமாயினுனென்று பலபிரமாணங்கள் துதிக்கும் எமது ஞானமணியை அந்யதா கூறுவார் கதி இனி யென்னுமோ வறியேம். இவ்விளவிலமையாமல் 'சுற்றுமுற்றுமாயினுன்', என்னுந் திராவிட சுருதியொன்று (யாம் முதலி லெடுத்துக் கொண்டவற்றுள்) எஞ்சியிருத்தலால், அதனையும் ஈண்டுப் பரியாலோசிப்பாம்.

சுற்றும், முற்றும் என்பது மேல்-கீழ்-நடு-பக்கம் என்றுபொருள்படும். ஆயினுன் என்பது இவ்வெல்லாப் பெருள்களும் பிள்ளையார் தாமேயாயினு ரென்பதை விளக்கியவாறறிக. இவ்வாறு பிள்ளையார் யாவற்றுள்ளும்விரவியது ஆண்டாண்டுள்ள வுயிர்களுக்குப் பாகம்வருவித்து உபகரித்தற்கேயன்றி வேறில்லை. இதனையே "தாவில்சராசரங்களெல்லாஞ் சிவம்பெருக்கும்பிள்ளையார்" என்று சேக்கிழார்பெருமானு மினிது பிரகாசப்படுத்தியருளினர். சரங்களுக்கறிவித்தலும், அசரங்களையசைவித்தலுமாகியசெயல் பிள்ளையாரது ஞானக்கிரியைகளாம். சேதனங்களுக்கு அறிவிக்கு ஞானமும், அசேதனங்களை அசைவிக்கும் கிரியையுமே தமது வடிவமாகவுடைய பிள்ளையாரை அவ்வாறு தெளிந்து குணப்படாமல் அவரறிவித்தா லறிந்தும் அசைவித்தா லசைந்து மியங்குவனவாகிய சிற்சடபேதங்களோ டினப்படுத்தி யலக்கண்படுவோரது மதமினி யெங்ஙனே சீவிக்கும்?

1\. "அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு"

2. "அகரவுயிர்போலறிவாகியெங்கு
நிகரிலிறைநிற்குநிறைந்து"

3. "உலகமும்பல்லுயிருமொன்றிநிறைந்தோங்கி
யிலகுஞ்சிவனெம்மிறை"

என்னுங் குறள்வெண்பாக்களாற் போதரும் பதியிலக்கணத்தையே "தாவில்சராசரங்களெல்லாஞ் - சிவம்பெருக்கும்பிள்ளையார்" என்னுந் திருவாக்கால் சேக்கிழார்சுவாமிகள் விளக்கியருளினொன்பதும் விவேகிகளொப்பத்தக்கமுடிவாயினதறிக. இவ்வாறு பஹுதரப் பிரமாணங்களாற் கொண்டாடத்தக்க சிவஸூநுவாகிய பிள்ளையாரையொரு சாமானிய அடியவராக எண்ணுதல் சிவத்துரோகமாகவே முடியுமென்க. ஞானசம்பந்தரைத் தெய்வமாக வொப்பியகாலத்தும், அவரடியவர் கோலங்கொண் டொழுகினமையால், அவரை யவ்வாறு கோட லிழுக்காதெனின், நன்றுகூறினுய். பிள்ளையார் சிவனுருக்குத் தாம் பாலராயிடுதலும், பாலராயிருந்துகொண்டே சிவபணிபூண்டொழுகுதலுமாகிய நலங்கள் பூர்வமும், பின்னும பெறப்பட்டிருப்பதனைப் "பாலனுயதொண்டுசெய்து பண்டுமின்றுமுன்னையே" என்னுந் திராவிடஸூக்தியால் பிரகாசப்படுத்துராகையால், "பண்டு" என்றது சுப்பிரமணியக்கடவுளாயிருந்து தொண்டுபுரிந்ததனையும், "இன்று" என்றது ஞானசம்பந்தராயிருந்து தொண்டுபுரிந்ததனைம் விவேகிகள்கொண்டு வாழ்த்தாநிற்பர். பூர்வம் பாலராயிருந்து தொண்டுசெய்த சுப்பிரமணியக்கடவுள் சிவனுருக்குத் தொண்டுபுரிந்தாரெனல்கொண்டு, அவனைச் சிவனடியார் என்று உலகங்கொண்டு துதிப்பதில்லை. அவனைத் தெய்வமாகவேகொண்டு வழிபடும். அப்படியே பிள்ளையாரிடத்துங் கொள்ளத்தக்கது. சுப்பிரமணியரும், அவரது அவதாரமாகிய பிள்ளையாரும் சிவசந்நிதியில் தங்களை அடியவர்களாக வெண்ணிக்கொள்வது ஸஹஜம். அவர்களைச் சீவர்களாகிய நாம் அவ்வாறு கோடலசங்கதமென்க. அவர்கள் அடிய்வர்களாக வொழுகியதும்

உலகமுய்தற் பொருட்டேயாம். அவர்கள் பாசநிவிர்த்தியின்பொருட்டோ சிவனை வழிபட்டார்கள்? அவர்கள் பணிந்தது "ஆசைசங்கரற்காயினதன்மையால்" என்றறிக. சோமசுந்தரக்கடவுள் மதுரையிலிருந்து அரசுபுரிந்தாராகையால், அவரைச் சோமசுந்தர மகாராஜா என்று யாவரேனும் பிரஸ்தாபித்தல் கூடுமோ? சோமசுந்தரக்கடவுள் என்று துதிப்பதே மரபாயிடுதெல்போல, ஞானசம்பந்தப்பெருமானை (இவரு மொரு சிவனடியார் என்று கூறுதலொழிந்து) பரமபதியென்று கோடலே மரபாமென்க. விரிக்கிற்பெருகும்.

இவ்வுண்மையை யுள்ளவாறு தெளிந்துணராமலும், உள்ளவாறு தெளிவிக்குஞ் சாதுக்களது சுபோதத்துக்குச் செவிகொடாமலும் அறியாமைமீதூரத்தருக்கி விபரீதஞானத்தை விலைகொடுத்து வாங்கிச் சிலகவிராயர்கள் தமது வல்லபத்தைக்காட்டி வாதுபேசுகின்றார்கள். என்னெனின், திருஞானசம்பந்தர் கடவுளாயின், தம்மை உரோமசமுனிவரது அவதாரமென்று அவர் தேவாரத்திற் சொல்லிக் கொண்டவா றென்னையென்று கடாவிச் செருக்குவதேயாம். பிள்ளையார் தாமருளிச்செய்த தேவாரங்களில் தம்மைப் பரமபதியென்று வெளிப்படுத்திய சுருதிவசனங்களையும், அவைகட்கு நம்பியாண்டார்நம்பிகள், சேக்கிழார்சுவாமிகள், வாதராயணர் முதலினோர் கூறிய உபப்பிரம்ஹணங்களையுமெடுத்து மேலே யாம் காட்டினேமாகையால், அவற்றோடு ஷைத்தேவாரம் விரோதமுண்டாகக் கூறி யிடர்ப்படுத்தாதென்க. இனி அதனை விளக்குகின்றோம்.

### திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்.
### வழிமொழித்திருவிராகம்.
### பண் - சாதாரி.

"ஒழுகலரிதழிகலியிலுழியுலகுபழிபெருகுவழியைநினையா
முழுதுடலிலெழுமயிர்கடழுவுமுனிகுழுவினொடுகெழுவுசிவனைத்
தொழுதுலகிலிழுகுமலமழியும்வகைகழுவுமுரைகழுமனகரப் [வே."
பழுதிலிறையெழுதுமொழிதமிழ்விரகன்வழிமொழிகள்மொழிதகை

இஃது யாமெடுத்துக்கொண்ட வழிமொழித்திருவிராகப் பதிகத்தில் திருக்கடைக்காப்பாயுள்ளது. இதற்குப் பூர்வபட்சிகள் கூறும் விபரீத வுரைகளை முன்ன ரெடுத்துக் காட்டிப் பின்ன ரெமது தெளிவுரையைத் தெருட்டி யுபகரிப்பா மென்க.

பூர்வபட்சிகள் மதம் வருமாறு:

க - வது போலியுரை.

இதழிகலியில் = இது கேட்டைத்தருகின்ற கலியாயிருத்தலில்
உழியுலகு = இடமகன்ற உலகத்தார்
ஒழுகலர் = ஒழுக்கத்தில் உறுதிப்படார். (அதனால்) (தி
பழிபெருகுவழியைநினையா = கேடுபெருகும் முறையைக்கரு
முழுதுடலில் = உடல் முழுதும் (முனிவர்
எழுமயிர்கடழுவுமுனி = எழாநின்றமயிர்களால் தழுவப்பெற்ற
குழுவினொடு = தம் திருக்கூட்டத்தோடு
கெழுவுசிவனை = திருக்கயிலையில்வீற்றிருக்கும்சிவபெருமானை
தொழுது = பரவி
உலகிலிழுகுமலம் = உலகத்திலே இழிவுதங்கிய அக்கலிமலம்
அழியும்வகை = கெடும்வண்ணம்
கழுவுமுரை = அம்மலத்தைப்போக்கும் பதிகமாக
கழுமனகரப்பழுதிலிறை = சீகாழியில் குற்றமற்ற ஆளுடைய பிள்ளையாராய் அவதரித்து
எழுதுமொழி = எழுதும் மொழிகளும்
தமிழ்விரகன்வழிமொழிகள் = தமிழ்விரகராகிய அத்திருஞானசம்பந்தருடைய வரலாற்றைக் கூறத்தக்க மொழிகளுமாகிய
மொழி = இத்தேவாரம்
தகைய = நிலைபெறுக. எ - று. ஏ - அசை.

இஃது

ஒரு ஆதீனத்தம்பிரான் சுவாமிகளெழுதியது.

உ - வது போலியுரை.

அழிகலியில் - அழியுங் கலியுகத்திலே, உலகு ஒழுகல் அரிது பழிபெருகு வழி உழியை நினையா - உயிர்கள் ஒழுக்கமின்றிப் பழிமிகுதற்கு ஏதுவாகிய (பாவ) வழியிலே சுழல்வதைக் கருதி, குழுவினொடு கெழுவு சிவனைத் தொழுது - (திருக்கைலாசத்திலே) சிவகணங்களாலே சூழப்பெற்ற சிவபிரானை வணங்கி, உலகில் இழுகுமலம் அழியும் வகை கழுவும் உரை - (தமிழ்) நாட்டில் (உள்ள அவ்வுயிர்களைத்) தொடர்ந்து செல்கின்ற மலசத்தி கெடும்படி சுத்தப்படுத்துகின்ற ஆணைபெறுதலுடைய, முழுது உடலில் எழுமயிர்கள் தழுவு முனி பழுதில் கழுமல நகர் இறை தமிழ் விரகன் வழிமொழி எழுது மொழி மொழிகள் தகைய - உரோமசமுனியும் நிருமலமான கழுமல நகரிலே தோன்றிய தலைவனும் முத்தமிழ் விரகனுமாகிய யான் வழிமொழித்திருவிராகத்திற்பாடி எழுது மறையாகிய தேவாரங்கள் மகிமையுடையன எ - று. உழிதரல் எனற்பாலது உழியெனக் கடைக்குறையாயிற்று. ஆல் ஒடுவாயிற்று. எழுது மொழி என்பதில் மொழியும், மொழிகளும் இலக்கணை.

இஃது

மதுரை வித்வானொருவ ரெழுதியது.

---

இப்போலியுரையாசிரியர்களது புன்மைகளை யினியெடுத்திசைப்பாம். இவருள், முதலாசிரியர் (உரோமச முனிவரது அவதாரமாகப் பிள்ளையார் தம்மைக் கூறிக்கொண்டாரெனவும், உரோமசமுனிவரே தாமாக வந்தமையைக் கூறினமையால், அத்திருப்பதிகம் வழிமொழி என்னும் பேர்பெற்றதெனவும்) செய்த பிரசங்கத்திற்கு அவரது மனம்போனபோக்கே ஆதரவாயினதன்றி வேறு ஒரு ஆதரவுங் கண்டிலம். யாரோ தெரியாதவர்கள் அந்தபரம்பரையாய்க்

கூறிவந்த (பாட்டிக்) கதையை நமதன்ப ராதரித்தது வெகு பரிதாபமென்க. ஔவையோடு பிறந்தவர் வள்ளிநாச்சியாரெனவும், திருவள்ளுவரோடு பிறந்தவர் சேரமான்பெருமா ணயனரெனவுஞ் சில பண்டிதர்க ளெழுதிவைத்திருக்குங் கதைகளோடு தானே நமதன்பர் தேடியகதையு மினப்பட் டொதுங்கியவாறறிக. இவர் தேடிய கதைக்கு இவரெடுத்துக்கொண்ட தேவார மிடங்கொடாதாயினு மிவரதனை யந்வயித்துப் பதம்பிரித்துப் பொருளுரைத்த வமைதியேனும் பொருந்துமோவெனின், அதனையெடுத்து ஈண்டு விரிப்பதிற் பயனில்லையென்று வாளாவிடுத்தாமென்க. பண்டிதராவார் அதன்பரிசுகண்டெள்ளி நகையாடாதொழியார். இனிப் பிள்ளையா ரப்பதிகவாயிலாய்த் தாம் வந்தவழியைக் கூறியதுண்டெனின், முதற்பாடற்றொடங்கி யொவ்வொரு பாடலிலு மதனை விரித்திடல்வேண்டும். அங்ஙனமின்றித் திருக்கடைக்காப்பின்மாத்திரங் கூறியது யாங்ஙனம்? திருக்கடைக்காப்பில் (இல்லாத பொய்யைக் கற்பித்துரைத்து, அந்தப் பொய்யினையே பதிகமுழுதுங் கூறியிருப்பதாகப் பிரசங்கித்து) நமதன்பர் வழிமொழிக்கு வகைதேடியது பேராச்சரியமாயதென்க.

இனி யிவரது சகோதரராக வெளிப்பட்ட மற்றையாசிரியர் "உரோமசமுனியும், நிருமலமான கழுமலநகரிலே தோற்றிய தலைவனும், முத்தமிழ்விரகனுமாகிய யான்" என்று பிள்ளையார் தம்மைக் கூறிக்கொண்டதாக வந்வயித்துப் பொருள் விரித்தார். சம்பந்தருக்கு உரோமசமுனிவர் என்னும்பேர் பெரியபுராண முதலிய நூல்களிற் கேட்கபபட்டதின்று. கழுமலநகரிற் றோன்றினரென்பதும், தமிழ்விரகரென்பதும் பல நூல்களிற் படிதமாயுள்ளன. இவற்றோடு சேராத உரோமசநாமத்தைப் பிள்ளையாருக் கிவரிதிற்றேடிப் புணர்த்தியது கலிகல்மஷாந்தகாரத்தின் பயனேயாம். இதுநிற்க, இவர் ஞாநசம்பந்தருக்கு ஒரு பெரிய மகிமைகண்டு கூறினர். என்னெனின், "உலகில் இழுகுமலம் அழியும்வகை கழுவும் உரை"

என்பதற்கு "தமிழ்நாட்டிலுள்ள அவ்வுயிர்களைத்தொடர்ந்து செல்கின்ற மலசத்திகெடும்படி சுத்தப்படுத்துகின்ற ஆணைபெறுதலுடைய" என்று பொருள்கூறியதேயாம். தமிழ்நாடுய்யவந்தவர் சம்பந்தரென்றால், மற்றைநாடுகளுய்யவந்தவர்கள் யாவர்? அவர்களெங்ஙெந்த ஜடாமுனிகளது அவதாரமாயுள்ளவர்கள்? இவற்றிற்கு யாதேனுங் கதியுண்டா? இல்லையா? இவரது விபரீதம் அறக்கொடிதென்க.

ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள்

1. "வையமெலா முய்யவரு மறைச்சிறுவர்"
2. "வையமேழுடன் மறைகளுநிறைதவத்தோரு
முய்யஞானசம் பந்தன்வந்தானெனவூத"
3. "எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளம்"
4. "ஏழிசையும் பலகலையு மெவ்வுலகுந் தனித்தனியே
வாழவருமவர்"
5. "சோதிமுத்தின் சிவிகை - அஞ்செழுத்
தோதியேறின ருய்யவுலகெலாம்"

என்றுகூறியருளிய வருமையுணர்ந்தவர்க்கு நமதன்பர் தேடிய விபரீதம் வெகு துச்சமாமென்க. இவரது புத்தி அகண்டமாய் விரியாததுகொண்டே பிள்ளையாருக்குத் தமிழ்நாட்டிற் கிடைக்கக்கூடிய கண்டவியாபகத்தைத் தேடிக் கண்டுபிடித்தாரிதென்கொலோ? இனி யிவர் "தாவில்சராசரங்களெல்லாஞ் - சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்றவிடத்திலுந் தமிழ்நாட்டிற்பிறந்த சராசரங்களென்று பொருள்விரித்து, அவைகளுக்கே பிள்ளையார் சிவத்வாபிவியக்தியை யுண்டு பண்ணினர் என்று பிரசங்கித்துத் தமது சித்தாந்தத்தைத் தாபிப்பார்போலும்.

எமது பிள்ளையார்

1. விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பிய மளித்தனர்.
2. விஷ்ணு - பிரமன் - இந்திரன் முதலினோர் திருவிழாப்பொலிவுகண்டு வணங்கித் துதிக்கப்பெற்றனர்.
3. அகஸ்தியபகவானுக்குத் திவ்யாநுக்ரகம் புரிந்தனர்.

4. கைலாசமலையி லெழுதப்பட்ட சௌந்தரியலஹரியில் துதிக் கப்பெற்றனர்.
5. அகோர சிவாசாரியரால் செய்யப்பட்ட நாடகாலங்காராதி கீர்வாண சாஸ்திரங்களுக்கு நாயகமணியாய் (பிரமேயப்பொருளாய்)நின்றனர்.
6. தமிழ்நாட்டாரல்லாத சோமநாதபாஷ்யகாரரால் "ஸம்பந்தாதிபுராதந:" என்று பிரஸ்தாபித்துத் துதிக்கப்பெற்றனர்.
7. தமிழ்நாட்டாரல்லாத சங்கராசாரியரால் துதிக்கப்பெற்றனர்.

இவைகளைப் பரியாலோசிக்கும் பண்டிதர்கள் பிள்ளையார் தமிழ்நாடெய்யவே வந்தாரென்று நமதன்பர் பிரசங்கித்ததைக் கண்டு பரிகசியாது வேறு என்செய்வார்கள்? இவ்வாறெடுத் தெழுதுவதென்று லிவரது விபரீதத்திற் கிந்நூலிலிடம் போதாது. இவரும், இவரோடு சேர்ந்து பொருள்விரித்த விவரது தோழரும் மயிர்முளைத்தமுனிவனைப் பிள்ளையாருக்கு மூலமாகத்தேடியதை நினைக்குந்தோறுஞ் சிரிப்பையே விளைக்கின்றது. பிள்ளையாருக்கு மூலமாயுள்ளவர் முருகக்கடவுளென்று முறையிடு நூல்கள் பலவிருக்கவும், அவற்றின் முகத்தில் விழிக்கவே சம்மதியில்லாம லின்னேரும், இவர்போன்ற வேறு சிலரும் பாவத்தழும்பேறிப் படிற்றுரை பேணிப் பீடழிந்த தென்னேயோ? இவ்வபசித்தாந்தத்தை யாழ்ப்பாண வித்வானெருவர் நாகைவெளிப்பாளையம் சைவசித்தாந்தசபையில் அச்சபையடியார்கள் பிணங்குமாறு திருஞானசம்பந்தப்பெருமானரது திருநட்சத்திர சுபதினமொன்றில் பிரசங்கித்தனராம். சுவாமியினது திருநட்சத்திர தினத்தில் அவரை யொருபசுவென்று நிந்தித்து, அப்பெருங்காரியம் தாஞ்செய்துவிட்டதாகத் தம்மை யதிகமாக மதித்து, அது யாவராலும் மறுக்கமுடியாத வுண்மையினதாகவுங் களிகூர்ந்த வப்பண்டிதசிரோணியா ரினியு மப்படிச்செய்து குறைவுதேடிக் கொள்ளாதிருப்பதே மரபாமென்க. இவ்ரும், இவரது சகோதரவித்வான்களுங் கூறிய விபரீத வுரைகளவலப்பட்டழியுமாறு ஷை திருக்கடைக்காப்பினதுண்மை

யை வேறு சில மெய்யுரைகளால் ஈண்டு யாம் வெளிப்படுத்துவாம். அவை வருமாறு:

சிதம்பரம்
ஸ்ரீமது இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
எழுதியது.

முழுது உடலில் எழும் மயிர்கள் தழுவும் முனி-உடல் முழுமையும் கிளைத்த உரோமந் தழுவலால் உரோமசனெனப் பெயர்பெற்ற முனிவரானவர்,—ஒழுகல் அரிது அழிகலியின் உழி உலகு பழிபெருகு வழியை நினையா - (யாவரும் தம்முடைய நெறியின்கண்ணே) ஒழுகுத லரிதாகும்படி அழிக்கின்ற கலியுகத்திலே உலகில் பழியே பெருகுகின்ற நிலைமையைச் சிந்தித்து;—குழுவினொடு கெழுவு சிவனைத் தொழுது - கணங்களோடு கலந்து விளங்கும் சிவபெருமானை வழிபட்டு,—உலகில் இழுகும் மலம் அழியும் வகை கழுவும் உரை கழுமலம் நகர் பழுதில் இறை- இவ்வுலகின்கண் தவறுதற்கேதுவாகிய மும்மலங்களும் அழியும்படி கழுவும் உயர்ச்சியால் கழுமலமெனப் பெயர்பெற்ற இத்தலத்திலே வீற்றிருக்கும் அழிவிலாக்கடவுளை, தமிழ்விரகன் எழுதுமொழி வழிமொழிகள் மொழிதகைய - தமிழ்விரகனெனப்படும் நாம் துதித்த எழுதப்படும் வேதமாயுள்ள இவ்வழிமொழித் திருப்பதிகப்பாடல்கள் (எவரும்) துதிக்கும் மேன்மையை யுடையன. எ - று.

முனி நினையா சிவனைத்தொழுது மலங்கழுவும் கழுமலம் என இயையும். உரோமசமுனிவர் சிவஞானோதயத்தின்பொருட்டுச் சிவபெருமானை வழிபட்டு மலத்தைக் கழுவலால் கழுமலமெனப் பெயர்பெற்றமை சீகாழித்தலபுராணக் கழுமல வத்தியாயத்துட் காண்க. அரிது என்பது அரிதாக வென்னும் எச்சப்பொருளையும் அழிஎன்னும் வினைத்தொகை பிறவினையையும் தந்தன. பழியே என்னும் பிரிநிலையேகா

ரம் விகாரத்தாற்றொக்கது. உரை உயர்ச்சி; உரையாலென மூன்றும் வேற்றுமையுருபுவிரிக்க. எழுதாக்கிளவியாகிய வேதம்போலாது இது எழுதப்படும் வேதமாகலின் எழுதுமொழி யெனப்பட்டது. வழி - முறைமை, அல்லது காரணம்; மொழி - மொழியப்படுவது; எனவே அத்தலத்திற்கு வந்த பன்னிருபெயர்க் காரணமும் முறையே மொழியப்பட்ட பதிகமெனப் பொருள்படும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலினும் அவ்வப் பெயர்க்காரணம் சுருக்கி விளக்கி யிருப்பதுபோல இத்திருக்கடைக்காப்பினும் உரோமசமுனிவர் மலங்கழுவலால் கழுமலமெனப் பெயர்பெற்றதென்று விளக்கியதன்றி, திருஞானசம்பந்தப்பிள்ளையார் தம்மை உரோமசனெனப் புலப்படுத்தியது சிறிதும் இன்றென்க.

---

ம - ள - ள - ஸ்ரீ

யாழ்ப்பாணம் சி. தம்பையாப்பிள்ளையவர்கள்

எழுதியது.

முழுதுடலில் எழு மயிர்கள் தழுவுமுனி ஒழுகல் அரிது அழிகலியில் உழி உலகு பழிபெருகு வழியை நினையா குழுவினொடு கெழுவுசிவனை உலகில் இழுகுமலம் அழியும்வகை தொழுது கழுவும் உரை கழுமலநகர்ப் பழுது இல் இறை தமிழ்விரகன் எழுதுமொழி வழிமொழிகள் மொழி தகைய. என அந்வயஞ்செய்க.

முழுதுடலில் எழு மயிர்கள் தழுவுமுனி - உரோமசமுனி,

ஒழுகல் அரிது அழிகலியில் - சன்மார்க்கமில்லாது அழியுங் கலிகாலத்தில்,

ஒழுகல் - ஒழுக்கம் ஈண்டுச் சன்மார்க்கம். அரிது, இன்மை.

உழி உலகு பழிபெருகு வழியை நினையா - இடம் அகன்ற பூவுலகு பழிகளால் விருத்தி அடையும் வழியை நினைந்து,

குழுவினொடும் - தன் குழுவோடும்,

கெழுவு சிவனைத்தொழுது - சீர்காழியில் வீற்றிருக்குஞ் சிவபெருமானை வணங்கி,

உலகில் இழுகும் மலம் அழியும் வகை கழுவு முறை - உலகத்தில் இழுக்கைத்தரும் மலம் அழியும் வகை கழுவிய (காரணத்தால்) சிவபிரான் றிருவாய்மலர்ந்தருளிய,

கழுமலநகர்ப் பழுது இல் இறை - கழுமலம் என்னும் காரணப் பெயரைப்படைத்தநகரில் வீற்றிருக்கும் குற்றமில்லாத தலைவருக்கு,

தமிழ்விரகன் எழுது மொழி வழிமொழிகள் - முத்தமிழ் வல்லவர் எழுதும் பதிகமாகிய வழிமொழிகள்,

மொழி. ஆகுபெயர்.

மொழி தகைய - எவராலும் பாராயணஞ் செய்யப்படுந்தகைமைய என்பதாம்.

வழிமொழி என்பது சீர்காழிக்குப் பன்னிரண்டு நாமம் வந்த வழியைச் சொல்லுதலாம்.

உரை கழுமலநகர் எனஇயைத்து, புராணவசனத்தையுடைய கழுமலம் என உரைப்பினும் அமையும்.

உரோமசமுனிவர்தான் திருஞானசம்பந்தசுவாமிகள் என்று சொல்லுகிறவர்கள்பொருள் சிறிதும் பொருந்தாது. சீர்காழிப்புராணம் கழுமல அத்தியாயம் பார்த்தால் இதன் பொருள் நன்ருய்த்தெரியும்.

---

பிரஹ்மஸ்ரீ

கும்பகோணம். வே. சாமிநாதையரவர்கள்

எழுதியது.

ஒழுகல் அரிது அழிகலியில் - யாவரும் நன்னெறியில் நடத்தலரிதாகிய அழிதற்குக்காரணமாகிய இக்கலியுகத்தின் கண்ணே, உலகு உழி - இவ்வுலகினிடத்து, பழி பெருகு வழியை நினையா - பழிக்கப்படும் தீநெறிகள் பெருகும் விதத்தை நினைந்து, (அதைமாற்ற எண்ணி) முழுது உடலில் எழும்

மயிர்கள் தழுவும் முனி-உடல் முழுதும் வளர்ந்தெழுந்த உரோமங்கள் சூழப்பெற்ற உரோமசமுனிவர், கெழுவு குழுவினொடு - தம்மோடுபொருந்திய முனிகணங்களோடுகூடி, சிவனைத் தொழுது - சிவபெருமானைவழிபட்டு, உலகில் இழுகும் மலம் அழியும் வகை கழுவும் - உலகத்தில் ஆன்மாக்கள் தத்தம் நிலைகுலைதற்குக் காரணமான அஞ்ஞானமாகிய சேற்றைக் கெடும்வண்ணம் கழுவியதற்கிடமான, உரை - ஆன்றோர்கள் துதிக்கின்ற, கழுமலநகர்ப் பழுது இல் இறை - கழுமலமென்னுந் திருநாமத்தையுடைய திருப்பதியின்கணெழுந்தருளிய பழுதில்லாத இறைவன்மீது, மொழி எழுது - சொற்களைத்தொடுத்து எழுதுவித்த, தமிழ்விரகன் வழிமொழிகள் - திருஞானசம்பந்தப்பிள்ளையாரருளிச்செய்த பின்னெதுகைத்தொடையையுடைய திருவிராகங்களிலுள்ள, மொழி - சொற்களானவை, தகைய - (பாராயணஞ்செய்பவர்களுக்கு எண்ணியவற்றை எண்ணியவாறே அருளிச்செய்து) பெருமைபெறுகவென்றவாறு.

அரிதாகிய கலியென வியையும். கலியில் - கலியுகத்திற் பழிபெருகுதல் போலவென்றுமாம். நினையா - செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். நினையாத் தொழுது கழுவும் கழுமல நகரெனக் கூட்டுக. கழுவுமென்னும் பெயரெச்சம் கழுமல நகரென்னும் இடப்பெயர் கொண்டு முடிந்தது. முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி - உரோமசமுனி. பலகாலந் தவஞ்செய்யும் முனிவர்களுடல்முழுதும் உரோமங்கள் வளர்ந்திருக்குமென்பதைப் பலபுராணங்களிலுங் காணலாம். உரோமசமுனிவர் இச்சீகாழியையடைந்து தவஞ்செய்து, சிவபெருமான் ஞானோபதேசம் செய்யப்பெற்று மலங்கழுவி வீடுபெற்றமையால், இத்தலம் திருக்கழுமலமெனத் திருநாமம்பெற்றது. இதனைச் சீகாழித்தலபுராணத்திலுள்ள கழுமலமான வத்தியாயத்தா லுணர்க. உரைகழுமலம் - வினைத்தொகை. இத்திருப்பதியைக் கழுமலநகரென்றதற்கேற்ப இறையைப் பழுதிலிறையென்றார். "கல்லானி

ழல்" என்னுஞ் செய்யுளில் 'மலேவு இல்லான்' என்றதற்கு மலேவை இல்லேயாகச்செய்பவனென்று ஸ்ரீசிவஞானமுனிவரருளிச்செய்தது போலப் பழுது இல் இறையென்றதற்குப் பழுதை இல்லேயாகச்செய்யுமிறையெனப் பொருள்கூறினும் பொருந்தும். சிவபெருமானேயும் சமயாசாரியர்களேயும் அபேதமாகக் கூறுதல் ஆன்றோர் வழக்காதலால், இறையெழுது மொழி தமிழ்விரகன் வழிமொழிகள், என்பதற்கு இறைவனருளிச்செய்த வடமொழிவேதமே தமிழ்விரகனருளிச்செய்த வழிமொழித் திருவிராகமாகிய தென்மொழி வேதமெனப் பொருள் கூறினும் பொருந்தும். தமிழ்விரகன் வழிமொழிகள் எழுது மொழியென இயைப்பினு மமையும். இயைக்குங்கால் எழுதுமொழியென்றது எழுதாமொழியாகிய வடமொழி வேதத்திற்கும் இதற்குமுள்ள வேறுபாடு கூறியபடி. இவ்விரண்டும் எழுதப்படுவது எழுதப்படாததென்னும் வேறுபாட்டையன்றி மற்றை ஒருவகையானும் வேறுபாடில்லாதனவென்பதாம். வழிமொழிகள் மொழிதகையவே யென்றதற்கு வழிமொழித் திருவிராகங்கள் மொழியும் பெருமையினேயுடையனவாகுகவெனக் கூறுதலுமொன்று. இத்திருப்பதியின் பன்னிரண்டு திருநாமங்களுள், கழுமலமென்பதன் காரணத்தை இப்பன்னிரண்டாஞ் செய்யுள் புலப்படுத்தியது போல மற்றைப் பதினெரு திருநாமங்களின் காரணங்களே இதற்கு முன்புள்ள பதினெரு செய்யுட்களும் நன்கு புலப்படுத்தியிருத்தல் காண்க. இதுபற்றியே இத்திருப்பதிகம் பன்னிரண்டு செய்யுட்களேயுடையதாயிற்று.

வழிமொழித்திருவிராகம் :—

வழி - பின் ; இராகம் - முடுகியல். வழிமொழியென்றது பின்னெதுகைத் தொடையயுடைய மொழிகளே. வழிமொழித்திருவிராகம் - அடிகடோறும் பின்னெதுகைத் தொடையையுடைய திருவிராகம். இப்பின்னெதுகைத்தொடையை அனுப்பிராஸமென்பர் வடநூலார். இனி இத்திருப்ப

திக்குரிய திருநாமங்கள் பன்னிரண்டும் வந்தவழியை மொழி தலையுடைய திருவிராகமெனப் பொருள் கூறினும் பொருந் தும்.

---

ம-ா-ா-ஶ்ரீ

சோடசாவதானம் சுப்பராயசெட்டியாரவர்கள்

எழுதியது.

கலி - கலியில், உலகு உழி பழிபெருகுவழி நினையா- உலகத்தில் சுழலும் பழிபெருகும் வழியைநினைத்து, முழுது டலில் எழுமயிர்கள் தழுவுமுனி - உடல்முற்றும் மயிர்கள் எழுந்து செறிந்த உரோமமுனிவர், குழுவினொடு - தமது மு னிவர் கூட்டங்களோடு, கெழுவுசிவனைத்தொழுது - எங்கும் நிறைந்த சிவபெருமானை வணங்கி, உலகில் இழுகும்மலம் அ ழியும்வகைகழுவும் - உலகில் தவறுதலமைந்த ஆணவமலமு தலிய மலங்கள் ஒழியும்வண்ணம் கழுவும், உரைகழுமலநகர்- புகழமைந்த கழுமலநகரத்தி லெழுந்தருளிய, ஒழுகு அலர் இ தழி - தேன்சிந்தும் கொன்றைமலர்மாலையை அணிந்த, பழு தில் இறை - இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய இறை வன்மேல், எழுதுமொழி தமிழ்விரகன் - எழுதாக்கிளவிபோ ல எழுதுகிளவியாகிய திருப்பாசுரங்களை மொழியும் முத்த மிழ்விரகரது, வழிமொழிகள் தகைய - வழிமொழியென்னும் இசையமைந்த திருப்பாசுரங்கள்பொலிக.

புன்சமயநூல்கள் தம்மைப்பயில்வோர்க்குப் பழியைப் பெருக்கும் வழியைக்கூறும் நூல்களாதலால் அவயவத்தின் தொழிலை அவயவிமேலேற்றிப் புன்சமய வழியென்பார் பழி பெருகு வழியெனவும், உரோமசமுனிவரெனப் பெயர்வந்த காரணங் கூறுவார் முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி என வும், தாமடையும்பேறு தம்மையடைந்தோரும் அடையக்கரு தினரென்பார் தழுவுமுனி குழுவினொடெனவும், ஏனைய கடவு ளரால் சிவபெருமானையன்றி மலநீக்கம் வாராதென்பார், அக்

காரணந்தோன்ற இறைவனைச் சிவனெனவும், அவ்விறைவனை வணங்கி மலபரிபாகமடைதற்கு எல்லையென்பார் மலமழியும்வகை கழூவு கழுமலநகர் எனவும், ஆன்மாக்களுக்கு அருளும் வகையால் புகழமைந்ததென்பார் உரைகழுமலநகரொன வும், ஏனைச்சமயிகளுக்குப் பற்றுக்கோடாயுள்ள இறைவர்கள் பாசங்களினின்று நீங்காதவரொன்பார் சிவபெருமானைப் பழுதிலிறையெனவும், உபலக்கணத்தால் எழுதாமொழியாகிய வேதம் கொள்ளப்படுமென்பார் எழுதுமொழி எனவும், ஓதாதுணர்ந்தவர் என்பார் தமிழ்விரகன் எனவும், பாவோடணைந்தது இசையாதலின் ஒற்றுமைபற்றி அவ்விசையே பாவென்பார் வழிமொழிகள் எனவும், அப்பா வார்தல்முதலிய எட்டுத்தானங்களில் அமைத்துப் பண்ணிற்பாடும்பண் என்பார் மொழியெனவும், வேதம் அந்தணர்முதலிய மூன்று வருணத்தார்க்கும் உரித்தாதல்போலாது அவ்வருணத்தார்க்கும் ஏனைய வருணத்தார்க்கும் உரிமைபூண்டு நிற்றலால் இவ்வெழுதுகிளவி வாழ்கவென்பார் தகைய எனவும் பணித்தருளினர்.

இராகமும் பண்ணுமாகப் பா இருவகைப்படுதலை "பாவோடணைத விசையென்பார் பண்ணென்பார் - மேவார் பெருந்தானமெட்டானும் - பாவாய் - எடுத்தன்முதலா யிருநான்கும் பண்ணிப் - படுத்தமையாற் பண்ணென்று பார்" என இசைமரபுடையார் கூறும் நூலிற்காண்க. கழுமனகர் எனவும் பாடம்.

———

இந்த மெய்யுரைகளா லிதுகாறும் பலர் பலமூலைமுடக்குகளிற் கிடந்து பிரசங்கித்திருந்த வாபாசவுரை சிதைந்து நிர்மூலமாயினதறிக. இவ்வுரைகளால், உரோமசமுனிவர் சம்பந்தராகவந்த தில்லையென்பது யாவரும் ஸ்பஷ்டமா யறியத்தக்கதாயிற்றென்க. இவ்வுரைக ளெமக்குக் கிடைத்த வரிசைக்கிரமப்படி யீண்டு வெளிப்படுத்தினமென் றறிக. இவ்

வுரைகள் பலவற்றுள்ளுஞ் சீகாழிப்புராணம், கழுமல அத்தியாயத்தை யெடுத்தோதியிருக்கின்றமையால், அதனை விவேகிகள் தேடியடைந்து மகிழ்வாராக. உரோமசமுனிவர் சிவதலங்கடோறுஞ் சென்று அரும்பெருந்தவ முயன்றும், தீர்த்தங்களின் மூழ்கியுஞ் சிவஞானமுதிக்கப் பெருமல் சீழியையடைந்து சிவபெருமானை விதிப்படி வழிபட அக்கடவுள் கருணைகூர்ந்து உமாதேவியாரோ டெழுந்தருளிப் பதிபசுபாசங்களை ஐயந்திரிபற விளக்கி யநுக்கிரகித்தமையால் அவர் உண்மைஞானம்பெற்ருரெனவும், அந்த ஞானங் காரணமாக அவரது மலங் கழுவப் பெற்றமையால் அப்பதிக்குக் கழுமலம் என்னும் பேர்சிறந்ததெனவும் பெரியோர் கொண்டாடித் துதிக்கும் புராணக்கூற்றினை யினியேனும் நமதன்பர் தெளிந்து குணப்படுவாராக. மந்தமதிகளது பிரமை நிவர்த்தியர்த்தம் அதிலொருவசனம் ஈண்டுதெகரிக்கின்ருேம்.

சீகாழிப்புராணம் கழுமல அத்தியாயம் கக - வது பாடல்

"மாற்றரியவெமதுதிருவாக்கினலுன்
மலங்கழுவவிளங்குதலாவிவ்வூர்க்கென்றுஞ்
சாற்றரியகழுமலமென்ருெருபேருந்
தாணிழற்கீழெய்துக."

என்று கூறிய துய்த்துணர்க. யாம் கூறவேண்டினவெல்லாமெமதுரையாசிரியர்க ளெடுத்துக் கூறினராகையாலிம்மட்டிலுபரதியடைந்தாம்.

இவ்வுரைகளுள்,

முதலுரைகாரர் "எழுதாக்கிளவியாகிய வேதம்போலாது இது எழுதப்படும் வேதமாகலின் எழுதுமொழியெனப்பட்டது" என்று விசேடங் கூறினர்.

இரண்டாவதுரைகாரர் "மூத்தமிழ் வல்லரெழுதும் பதிகமாகிய வழிமொழிகள் எவராலும் பாராயணஞ்செய்யப்படுந் தகைமைய" என்று விசேடங் கூறினர்.

மூன்ருவதுரைகாரர் "சிவபெருமானையும் சமயாசாரியர்களையும் அபேதமாகக் கூறுதல் ஆன்ருேர் வழக்காதலால், 'இறைமெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள்' என்பதற்கு இறைவனருளிச்செய்த வடமொழிவேதமே தமிழ்விரகனருளிச்செய்தவழிமொழித்திருவிராகமாகிய தென்மொழி வேதமெனப் பொருள்கூறினும் பொருந்தும். தமிழ்விரகன் வழிமொழிகள் எழுதுமொழியென இயைப்பினுமமையும். இயைக்குங்கால் எழுதுமொழியென்றது எழுதாமொழியாகிய வடமொழி வேதத்திற்கும் இதற்குமுள்ள வேறுபாடு கூறியபடி. இவ்விரண்டும் எழுதப்படுவது எழுதப்படாததென்னும் வேறுபாட்டையன்றி மற்றை ஒருவகையானும் வேறுபாடில்லாதன வென்பதாம்" என்று விசேடங் கூறினர்.

நான்காவதுரைகாரர் "உபலக்கணத்தால் எழுதாமொழியாகிய வேதம் கொள்ளப்படுமென்பார் எழுதுமொழியெனவும்" என்று விசேடங் கூறினர்.

இவ்வுரைகாரர்களேயன்றி இன்னுமெத்தனை யுரைகாரர்களேற்பட் டெழுதினும் "எழுதுமொழி" என்பதற்கு எழுதும் வேதம் என்றே பொருளுரைப்பர். எழுதாக்கிளவி என்பதற்கு எழுதாதவேதம் என்று பொருள்விரிப்பதுபோல எழுதும் வேதத்திற்கு எழுதுகிளவி அல்லது எழுதுமொழி என்று பேர்கூறுவதே மரபென்றுெழிக. இதனுல் வேதம் இருவகைத்தெனவும், அவை எழுதாமறை-எழுதுமறைகளாமெனவும், அவற்றுள் எழுதாமறைக்கு ஆக்கியோர் சிவபெருமானெனவும், எழுதுமறைக்கு ஆக்கியோர் சம்பந்தப்பெருமானெனவும் அறிவதே முடிவென்றறிக. திருஞானசம்பந்தப்பெருமானது திருவாக்கினையேயன்றித் திருநாவுக்கரசுசுவாமிகள் - ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் - ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகளாகிய இவர்களது திருவாக்குகளையும் வேதம் என்றது யாங்ஙனமெனின், அவர்கள் சம்பந்தரில் வேருகாத சிவாவதாரமூர்த்திகளாதல்கண்டுகூறியபடியாமென்க.

ஈண்டெழுதிய வுரைகளில், இரண்டாவதுரைகாரர் "எவராலும் பாராயணஞ் செய்யப்படுந்தகைய" என்று பிள்ளையா

ரது எழுதுமொழியைக் கூறினாராகையால், அவ்வெழுது மொழி பாராயணத்தா லநுஸந்திக்கத்தக்க வேதமென்று வெளிப்பட்டது. வேதபாராயணம் என்று உலகினர்வழங்கு மரபானு மதனை யறிந்திடுக. முதலுரைகாரரும், நான்காவதுரைகாரரும் எழுதியது வெளி. இனி, மூன்றாவதுரைகாரர் தமதாசை முழுதுங்காட்டிச் சமயாசாரியர்கள் சிவரூபமென்பதையும், அவர்க ளருளிச்செய்த திருமுறைகள் வேதமென்பதையும், அவருள், ஞானசம்பந்தர் திருவாக்கால் தேவாரத்திருமுறைகள் எழுதுமொழி, அல்லது எழுதும் வேதம் என்று பெறப்பட்டது என்பதையும் பிரகாசப்படுத்தினர். அதிக அருமைகண்டு கூறிய இவரது அன்பு யாவராலும் வியக்கற்பாலதேயாம். எமது காழிநாதரது திருமுறையை வேதம் என்றுகூறிய வேறு பிரமாணங்கள் வருமாறு:

ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள்

1. "தமிழ்வேதம்பாடினார் தாளம்பெற்றார்"
2. "பொருவிறப்பவோதினர்புகலிவந்த புண்ணியனா ரெண்ணிறந்தபுனிதவேதம்"
3. "விருப்புடன்பாடலிசைத்தார் வேதந்தமிழால்விரித்தார்"
4. "எழுதுமாமறையாம்பதிகத் திசை - முழுதும்பாடி"
5. "மிக்கசொற்றமிழினல் வேதமும்பாடினார்"
6. "தூக்கின்றமிழ்விரகர் சொல்விறந்தஞானமறை
தேக்குந்திருவாயாற் செப்பியருள்செய்தார்"

என்று அருளிச்செய்தனர்.

ஸ்ரீமத் அருணகிரிநாதர்

"ருக்கு ஐயம்போக வுரைத்தோன்"

என்று கூறிப் பிள்ளையாரது தேவாரத்தை ருக்வேதமென்று பிரகாசப்படுத்தியருளினர்.

இத்யாதி பிரபல பிரமாணங்கள் தேவாரத்தைவேதமுமென்றற் காதரவாயிருந்திடவு மிவற்றைத் தெளிந்திடாத சிலமூர்க்கர் தேவாரதிருவாசகங்களுக்கு வேதம் என்று யாவர்

பேரிட்டார்களென்று கடாவித் தருக்கினர்கள். இதுகாறும் யாம் விரித்துரைத்த நியாயங்களாலவர்தருக்கு அவரது மதியின் றிருக்காயதென்க. இவர்க ளிவ்வளவி லமையாமல் மூவர் திருவாக்குகளுக்குத் தேவாரம் என்று யாவர் பேரிட்டார்களெனவும் வினவிச் செருக்கினர்கள். "சைவத்தின்மேற் சமயம்வேறிலையதிற் சார்சிவமாந், தெய்வத்தின்மேற்றெய்வ மில்லெனுநான்மறைச் செம்பொருள்வாய், மைவைத்தசீர்த்திருத் தேவாரமுந் திரு வாசகமு, முய்வைத்தரச்செய்த நால்வர்பொற்றுளெம் முயிர்த்துணையே" என்று சைவப்பெரியோர் துதித்தனராகையால் அவர்போன்று பிறருந்துதிப்பதே மரபாமென்க. தேவாரம் என்பது தெய்வமாகிய சிவனார்மீது சாற்றும் மாலை என்று பொருள்படும். மூவர்முதலிகளது திருவாக்குகளுக்கு அவை தோன்றியபோதே தேவாரம் என்னும் பெயர் சிறந்திருத்தல் காண்க. ஆகையினற்றானன்றே சிவாலயமுனிவருக்கு அகத்தியனர் (மூவர்முதலிகள் திருவாக்கிலிருந்து) திரட்டிக் கொடுத்தருளிய பதிகங்களுக்குத் தேவாரத்திரட்டு என்னும் பெயர் பிரசித்தியடைந்திருக்கின்றது? இதனை அகத்தியனர் திரட்டினமையால் இதற்கே அகத்தியத்திரட்டு என்றும் பெயராம். ஆன்றோர் வழக்கிற் கட்டுண்டு தேவாரதிருவாசகங்களை யநுஸந்தித்து உய்யும்வழிதேடாமல் அதற்கந்தப் பெயர் யார் கொடுத்தது, இதற் கிந்தப்பெயர் யார்கொடுத்தது என்று விபரீதவினக்களையெழுப்பிக் காலப்போக்குச்செய்திடல் கயவர்க்கே தவப்பாடாய்முடிந்ததென்க. இனி யிக்கலிநண்பர்கள் சேக்கிழார் வாக்குக்குப் பெரியபுராணம் என்று ஏன் பெயர்வந்தது? திருமூலர் நூலுக்குத் திருமந்திரம் என்று யார் பேரிட்டது? ஏனையநூல்களுக்குத் திருவிசைப்பா-திருப்பல்லாண்டு என்று எப்படிப் பெயர்கள்வந்தன? என்று கேட்கவும்பின்னிடையார்கள். இந்த நூல்களி லன்புவையாத பாவிகளுக்கே வீண் விபரீதமுண்டாகுமாகையால், அவர்களை யாமொரு பொருளாக மதியா தொதுக்குவதே யுசிதமாமென்க. இவ்வாறு தருக்குவார் சைவசமயிகளாகார். சைவர்போன்று

விபூதியா லுடல்வெளுத்து நாடகம்புரியும் மாயாவாதிகளே யாவரென்றறிக. இவர்களையேயன்றோ "பசுநூல்கற்கும் - பிச்சரைக்காணுகண்வாய் பேசாதப் பேய்களோடே" என்று பிரதிஷேதித்தனர் திருமாளிகைத்தேவரும்? இவற்றைத் தெளிந்த விவேகிகள் கலிநண்பர்களாகிய அவரது துர்ப்போதனைகளாற் கலங்கி வருந்துருரொன்க. இதுநிற்க.

உரோமசமுனிவரது அவதாரமாயுள்ளவர் சம்பந்தப் பெருமானென்று வாதிப்பவருட் சிலர் தமது மதத்திற்குப் பிரமாணங்காட்ட விசையாதாயினும், ஒரு கதை சொல்லுகிறார்கள். என்னெனின், உரோமசமுனிவர் பிறந்து மூன்று வயசானபோது சுப்பிரமணியக்கடவுள் அவரிற் கலந்தாரெனவும், அந்த அவசரத்திற்றான் உமாதேவியார் அவருக்குத் திருமுலைப்பாலையூட்டினாரெனவும், இந்த வுண்மைகண்டே பூர்வீகர்கள் அவரை முருகக்கடவுளென்று துதித்தார்களெனவுந் தாபிப்பதேயாம். வேறு சிலர் சம்பந்தர் பிராட்டியினது திருமுலைப்பாலையுண்ட சம்பந்தத்தால் அவரைச் சிவகுமாரர் என்று பெரியோர்கள் உபசாரமாய்க் கூறினார்களென்று பிரஸ்தாபிக்கின்றார்கள். இருதிறத்து ஆபாசகர்களுக்கும் முறையே விடைகூறி அவர்களை வாய்மாளச்செய்வாம்.

முதற்பட்சத்தார் தமது பிரசங்கத்துக்குப் பிரமாணங்காட்டாமையானும், உரோமசமுனிவர்தான் சம்பந்தரென்று தேவாரமுரைப்பதாக அவர் தொடுத்தவாதம் தோல்வி யடைந்தமையானும் அவர் கூறுங் கதைகளெல்லாங் கபோதிக்கதைகளென்றே அறியவேண்டியது. அவர் ஒரு பிரமாணத்தானுஞ் சாதிக்காத மயிர்முளைத்தமுனி கதையை உண்மையாகவும், யாம் பலபிரமாணங்களாற் சாதிக்கும் மயிலேறும் பெருமாள்கதையை உபசாரமாகவுங் கொள்ளவேண்டுமென்பது என்ன மதியோ? மயிர்முளைத்தமுனியே சம்பந்தராக வந்தாரென்று பெரியபுராணம், சீகாழிப்புராண முதலியன கூறுமாயின், ஏனைய நூல்களில் சம்பந்தரை முருகக்

கடவுளாகத் துதித்திருப்பதை ஒருகால் உபசாரமென்று வாதிக்கலாம். அங்ஙனமில்லாமையாலும், எல்லா நூல்களும் ஒரேமாதிரியாகக் கூறி, சம்பந்தனை முருகக்கடவுளென்றே போதித்தலாலும் முருகக்கடவுளே ஞானசம்பந்தனென்பது சத்தியமும், ரோமரிஷியி னவதாரம் சம்பந்தனென்பது அசத்தியமுமாக வறிவதே முடிவென்றறிக. இனி உரோமசமுனிவர் சம்பந்தராகப் பிறந்தபோது அவரது மூன்றாவது வயசில் முருகக்கடவு ளவரிற் கலந்தாரென்பதற்குப் பிரமாணங் கிடையாதொழியி னொழிந்திடுக. அதற்கு நியாயமாவது கிடைக்குமோ வென்பதைச் சிறிது யோசிப்பாம்.

உரோமசமுனிவரோர் பசு. அவரது அவதாரமாகக் கொண்டால் சம்பந்தரும் பசு. இந்தப் பசுவினிடத்திற் பதியாகிய முருகக்கடவுள் ஏன் கலந்தனர்? அப்படிக் கலந்தவிடத்தும், மூன்றாவது வயதிற் கலந்ததென்னே? எப்போது அவரிடத்தினின்றும் பிரிந்தனர்? சம்பந்தரது திருமணத்தில் அவரிடத்தில் முருகக்கடவுளிருந்து அவரோடு சோதியிற் கலந்தனரா? அல்லது அதற்குமுன்னரே அவனைவிட்டுக் குதித்தோடிப்போயினரா? அன்றியுஞ் சம்பந்தரோடு கலந்திருந்த முருகக்கடவுள் அவர் ஜலமலம்விடும்போதும், உண்ணும் போதும், உறங்கும்போதும் என்னசெய்துகொண்டிருந்தார்? ஏனேவிப்படி மயிர்முனியவத்தைகளையெல்லாம் முருகக்கடவுள் கூடவிருந்து படவேண்டும்? பசுவினது அநிஷ்டங்களையெல்லாம் பதியுங்கூடக் கலந்திருந்து படவேண்டுமென்பது ஆவசியகமோ? இதற்கு விடைபகர்வாராக. என்னே? கடவுள் உயிர்கடோறுங் கலந்திருத்தலால், அவருக் கவ்வுயிர்கள்படும் பாடுகளெல்லாங் கேட்கப்படாததெனின், நன்றுகூறினாய். எல்லாவுயிர்கடோறுங் கலந்திருப்பதுபோலச் சம்பந்தரிடத்திலுங் கலந்திருக்கின்றார் கடவுளென்று கூறாமல் அவரது மூன்றாவது வயசில் முருகக்கடவு ளவரி னுழைந்தாரெனல் யாங்ஙனம்? முருகக்கடவுள் சம்பந்தரது மூன்றாவது வயசிலி லவரிற் கலந்தாரென்று கூறுகையால், இது கடவு

ளெல்லா வுயிர்களோடுங் கலந்து அவ்வுயிர்களை யியக்குவ தனோடு ஸாத்ருசமாகாதென்க. சம்பந்தரிடத்திலன்றி யே னையோரிடத்தில் முருகக்கடவுள் கலந்திடாமையால், உரோமசமுனிவர் பிறந்து படும்பாடுகளையெல்லாம் முருகக்கடவுள் ஏன் கூடக் கலந்திருந்து படவேண்டும் என்று யாம் கடாவியது ஸாமஞ்சஸமேயாம். அன்றியும், முருகக்கடவுள் சம்பந்தரிடத்தில் எப்படிக் கலந்தார்? சம்பந்தரது உடலிற் கலந்தாரா? அவரது உயிரிற் கலந்தாரா? அப்படிக் கலந்தகாலத்தில் முருகக்கடவுள் உருவத்துடன் கலந்தாரா? உருவமின்றிக் கலந்தாரா? அமிசத்தினாற் கலந்தாரா? ஆவேசத்தினாற் கலந்தாரா? சத்தியினாற் கலந்தாரா? சத்திகளோடு கலந்தாரா? சத்திகளின்றி கலந்தாரா? இவைகளைப் பரியாலோசிக்குங்கால் எல்லாம் அஸம்பாவிதமாகி யழிகின்றன. அவைகளை யினிது விளக்குதும்.

முருகக்கடவுள் சம்பந்தரது உடலிற் கலந்தாரெனின், ஒரு உடலின் மற்றோருடல் கலவாதாகையாலும், சம்பந்தரது சிறிய வுடலோடு முருகக்கடவுளது பெரியவுடலொன்றுபட்டிணங்காதாகையாலும், சம்பந்தரது பிராகிருதவுடலோடு முருகக்கடவுளது அப்பிராகிருதவுடலொட்டாதாகையாலும், ஒட்டியதெனின் முருகக்கடவுளுடலும் பிராகிருதமாகி யழியுமாகையாலும், அதனைப் பிராகிருதமாகக் கொள்ளின், அது மற்றொரு பிராகிருதத்தோடு சேர்தலிற் பயனின்றாகையாலும் அது அசம்பாவிதமென்றறியத் தக்கது.

இனி, முருகக்கடவுள் கலந்தது சம்பந்தரது உடலிலன்று உயிரிலெனின், அவ்வுயிருக்குச் சம்பந்த ருடலொன்று, முருகக்கடவு ளுடலொன்று ஆக இரண்டுடல்கள் வேட்கப்படுமாகையாலும், அங்ஙனங்கொள்ளின், ஒரு உறையின் மேல் மற்றோ ருறைபோடுவதுபோல் ஒரு உடலுக்குமேல் மற்றோருடல் போர்த்த தாகின்றமையாலும், அப்படியுங்

கொள்ளின், ஒன்று பிராகிருதவுடல் - மற்றொன்று அப்பிரா கிருதவுடலாகின்றமையாலும் அதுவும் அசம்பாவிதமேயாம்.

இனி முருகக்கடவுள் தமதுடல்கொண்டு கலவாமல் உயிர்மாத்திரத்தாற் கலந்தானெனின், அவரது உடல் பிராகிருதமாகாமையாலும், அவ்வுடல் அவரது ஞானகனமாகையாலும், அவரது சேதனத்தினின்றும் பிரிக்கப்படாதவதனை வர்ஜித்துவிட்டுச் சேதனமாத்திரத்தாலவர் கலந்தானெனல் அசங்கதமாம். அவரது உடல் ஞானகனமாயினும், அவரிந்த ஞானத்தாலுருவத்திருமேனி கொள்ளுதல்போல அருவத்திருமேனி கொள்ளுதலுங் கூடுமாகையால், அவரவ்வருவத்திருமேனியாற் கலந்தானெனின், அவரவ் வருவத்திருமேனியாற் கலந்தது உயிரின்மாத்திரமா? உயிரிலுமுடம்பிலுமா? உயிரின்மாத்திரமெனின், அதனோடு முன் கூடியிருந்த ஜடவுடம்பு பிணமாய்க் கீழேவிழும். இரண்டிலுமெனின், அவ்வுயிருக்கு அப்பிராகிருதமாகிய அருவத்திருமேனியும், பிராகிருதமாகிய ஜடவுருவத் திருமேனியுங் கேட்கப்படும். அருவமாகிய அப்பிராகிருத சரீரமும், உருவமாகிய பிராகிருதசரீரமும் ஒரு உயிருக்கமையட்டுமேயெனின், விஜாதிகளான இரண்டுருவங்களொரு சேதனனிடத்திலமைதல் கூடாது. அன்றியும், பத்தசேதனனுக்குக் கடவுளைத் திருமேனியென்றலுங் கூடாது. கடவுளுக்குத்தான் சேதனன் திருமேனியாகட்டுமேயெனின், அந்தச்சேதனன் தனது பிராகிருதவுடலைவிட்டுப் பிரியாமையாலும், அவ்வுடலோடு கூடிய வுயிரிற் கடவுள் கலக்குங்கால், அக்கடவுளுக்குச் சேதனனொரு சரீரமும், அவன் சுமந்திருந்த அசேதனமொருசரீரமு மாகின்றமையாலும், அப்படியாகுங்கால் சேதனாசேதனங்களையியக்குதற்குக் கடவுளெங்குங் கலந்திருக்குஞ் சம்பந்தமே நிலைபெறுகின்றமையாலும் முருகக்கடவுள்உரோமசரிடத்து மூன்றுவது வயதிற் கலந்தானென்பதிலுண்டாகிய பிரயோஜனம் அவலமாம்.

இனி அவர் அமிசத்தினற் கலந்தாரென்று கொள்வா மெனின், அமிசியைவிட்டு அமிசம்பிரியாதாகையாலும், முன் கூறிய அமிசியினதிலக்கணமே யிவ்வமிசத்துக்குங் கேட்கப்ப டுமாகையாலும், மேற்கூறிய வாசங்கைகளனைத்து மிவ்வமி சப் பிரசங்கத்திலு நிகழுமென்றறிக. இனி ஆவேசத்தினற் கலந்தாரெனின், ஆவேசம் அற்பகாலத்தை யபேட்சிக்குமன் றித் தீர்க்ககாலத்தி னிலைபெருது. அங்ஙனம் நிலைபெறின், சேதனனுக்கு ஒரு சுதந்திரமுங் கூடாது. அப்போது அவ னுக்கு ஆகாரம் நித்திரை முதலியனவுங் கெடும். இத்தகைய வாபாசம் கேவலம் பிரதிபந்தமாய் முடியும். பேயினற் பிடி யுண்டவன்கதையோடுதானே இதுசேரும். இனிச் சத்தியி னற் கலந்தாரெனக்கொள்வோமாயின், இது மந்திரியினிடத் தில் அரசனதுசத்தி பதிந்ததுபோலாம். அங்ஙனங்கொள் ளின், பிள்ளையைக்காக்கப் பிதாவினிடத்திலும், மனைவியைக் காக்கப் புருஷனிடத்திலும், மாணுக்கனைக்காக்கக் குருவினி டத்திலும், குடிகளைக்காக்க அரசனிடத்திலுங் கடவுளது சத்தி பதிந்திருத்தல் திண்ணமாகையால், அதனேடு ஸாம்யம் பெற்றுப் பூர்வபட்சிமதம் அழியும். இனிச் சத்திகளோடு கலந் தாரெனின், சத்தராகிய முருகக்கடவுளைப்போ லவரது சத்தி களுக்குந் திருவுருவங்கள் கேட்கப்படுகையால் சத்தியுருவங்க ளிரண்டு, தமதுருவமொன்று ஆகமூன்றுருவங்களோடு கலந் தாரென்னும் அஸம்பாவிதத்துக்கிடமுண்டாகி யழியுமென்க. இனிச்சத்திகளின்றிக் கலந்தாரெனின், சத்தனைச்சத்திகள் பி ரியாமையாலும், அச்சத்தன் உருவத்திருமேனி கொண்டா லும், அருவத்திருமேனி கொண்டாலும் அத்திருமேனிகளவ ரது சத்திகளேயாமாகையாலும், சத்திகளைவிட்டுச் சத்த னென்றுஞ் செய்யமாட்டானுகையாலும், சத்தன்செய்யும் யாவுஞ் சத்திகள் செய்வதேயாமாகையாலும் அதுவும் அஸா மஞ்சமாயினதறிக.

இவ்வாறு அலக்கண்படும் பூர்வபட்சிமதத்தி னுபா சத்தை யின்னுங் கொஞ்சமெடுத் திசைப்பாம். உரோமச

முனிவர் சம்பந்தராய்ப் பிறந்தபின்னர் அவரது மூன்றுமாண்டில் முருகக்கடவுளவரிற் கலந்ததுண்டாயின், சீகாழிப்புராணத்தில்,

1. "ஞானசம்பந்தவள்ளலாய் முருகன்வந்துதித்த"
2. "சிவபாதவிரதயன் - முருகனைப்பெறுவான்றேய்தவம்புரிந்தனன்"
3. "மதலையாய்வந்தனன் கந்தன்"
4. "நின்மகற்கு - விளங்கிழாய்முலைப்பாலருளெனக்கனகவில்லுடைவள்ளல்"

என்று கூறியிருப்பதென்னை? இவ்வாக்கியங்களில், முதல்வாக்கியம் முருகக்கடவுளே ஞாநசம்பந்தராக வவதரித்தாரென்று கூறுகின்றது. இதில், ஞாநசம்பந்தரிடத்தில் முருகக்கடவுள் புகுந்ததாகப் பெறப்பட்டதின்று. இரண்டாவது வாக்கியம் சிவபாதவிருதயர் முருகக்கடவுள் தமக்குப் புத்திரராக வரவேண்டித் தவஞ்செய்தாரென்று கூறுகின்றது. இதில் உரோமசமுனிவர் தமக்குப் புத்திரராய் வரவேண்டித் தவஞ்செய்ததாகப் பெறப்பட்டதின்று. மூன்றுவது வாக்கியம் முருகக்கடவுள் ஒரு குழந்தையாய்ச் சிவபாதவிருதயர்முன் றோன்றினாரென்று கூறுகின்றது. இதில், உரோமசமுனிவர் ஒரு குழந்தையாய்ச் சிவபாதவிருதயர் முன் றோன்றினாரென்று பெறப்பட்டதின்று. நான்காவது வாக்கியம் சிவபெருமான் உமாதேவியாரைப்பார்த்து உன் மகனுக்குத் திருமுலைப்பால் கொடு என்று கட்டளையிட்டதாகக் கூறுகின்றது. இதில், உரோமசமுனிவனாகிய இவனுக்கு உன்றிருமுலைப்பால் கொடு என்று சொன்னதாகப்பெறப்பட்டதின்று. உரோமசமுனிவர் சிவபாதவிருதயருக்குப் பிள்ளையாய்வந்ததுண்டாயின், அதனை யவ்வாறு கூறுமல் சிவபாதவிருதயர் முருகனைக்குறித்தே தவஞ்செய்தாரெனவும், அவ்வாறுதோன்றிய முருகனைப் பிரஸ்தாபித்துஉன்மகனுக்குப்பாலருத்துவாயென்று அம்மையைநோக்கிச் சுவாமி சொன்

ஞானெனவும் ஷை புராணம் விளக்கியவாறென்னை? இம்மட்டோ, ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள்

பெரியபுராணத்தில்

"சேவாண்டகொடியவர்தஞ் சிரபுரத்துச்சிறுவர்க்கு
மூவாண்டினிகழ்ந்ததனை மொழிகின்றேன்"

என்று கூறியவாறென்னை? ஈண்டுச் சேவாண்டகொடியவர்தஞ் சிறுவர் என்றது யாரை? பிள்ளையாரையேயன்றோ? இந்தப்பிள்ளையார் உரோமசமுனிவரது அவதாரமாயிருப்பின், "உரோமசருக்கு - அல்லது, அவரது அவதாரமாய்நின்றவருக்கு - மூவாண்டினிகழ்ந்ததனை மொழிகின்றேன்" எனவன்றோ கூறுதல்வேண்டும்? அன்றியும், "உரோமசரில், அல்லது - அவரது அவதாரமாய் நின்றவரில் - அவரது மூவாண்டில், சேவாண்டகொடியவர்தஞ் சிறுவர்புகுந்தபடி மொழிகின்றேன்" என்று கூறுதலுமன்றோவமையும்? இவற்றைப் பரியாலோசிப்பவர்கள் முருகக்கடவுளே ஞானசம்பந்தராய் அவதரித்திருந்தாரெனவும், அவரது மூன்றாமாண்டில் அவரிடம் நிகழ்ந்த வதிசயத்தைச் சொல்லுகின்றேனெனவுஞ் சேக்கிழார்பெருமான் பிரகாசப்படுத்திய வாய்மையையே தெளிந் தின்புறுவரென்க. ஈண்டிவர் "சேவாண்டகொடியவர்தஞ் சிரபுரத்துச்சிறுவர்க்கு - மூவாண்டினிகழ்ந்ததனை மொழிகின்றேன்" என்று கூறியதனு லிதற்கு முன்னரும் பிள்ளையாரைச் சிவகுமாரரென் றிவர் பிரஸ்தாபித்திருப்பதாக வேற்படுகின்றது. முதற் பிரஸ்தாபித்தது புரோவாதமும், பின்னர்ப் பிரஸ்தாபித்தது அநுவாதமுமாம். அப்புரோவாதவாக்கியம் "தாவில்சராசரங்களெல்லாஞ் - சிவம் பெருக்கும்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்" என்பதாம். பின்னர்ப் பிரஸ்தாபித்த அநுவாதவாக்கியத்தில், "சேவாண்டகொடியவர்தஞ் சிறுவர்" என்ற பகுதியால் சிவனாரது இளைய மைந்த ரவதாரமாயுள்ளவர் காழிப்பிரானுரென்பதும் வெளியாகியதுணர்க. இனிப் பூர்வபட்சிகள் "சேவாண்டகொடியவர்தஞ் சிரபுரத்துச்சிறுவர்" என்ற பகுதியில் "சிறுவர்" என்

பது "சிரபுரத்து" என்பதனைத் தொடர்தலால் "சிரபுரத்துச் சிறுவர்' 'என்பதே யமையுமெனவும், "சேவாண்டகொடியவர் தம்" என்பதனைச் "சிரபுரம்" என்பது தொடர்தலால் "சேவாண்டகொடியவர்தஞ் சிரபுரம்" என்பதே யமையுமென வுங் கூறிச் "சேவாண்டகொடியவர்தஞ் சிறுவர்" என யாமந்வ யித்ததை மறுக்கமுந்தலாம். அது கூடாது. ஏனெனின்,

1. "சேவிற்றிகழ்ந்தவர்மைந்தரானதிருஞானசம்பந்தர்"
2. "இறைவர்திருமைந்தர்தமை"
3. "புரமெரித்தார்திருமகனர்"
4. "செய்யமேனியர்திருமகனர்"

என்னும் பிரபலபிரமாணங்களோடு அவர்கூற்று முரணியழி தலாலென்க. இவைகளேயன்றிப் பிள்ளையார் சிவகுமார ரென்பதை யினிது தாபிக்கும் வேறொரு வாக்கியம் ஈண்டு வருமாறு:

"ஈசர்மிழலையிறையவர்பா லிமயப்பாவைதிருமுலைப்பால்
தேசமுய்யவுண்டவர்தாந் திருமாமகனராதலினல்
காசுவாசியுடன்பெற்றார் கைத்தொண்டாகுமடிமையினல்
வாசியில்லாக்காசுபடி பெற்றுவந்தார்வாகீசர்"

என்னு மிந்தவாக்கியத்தில் பிள்ளையாரைச் சிவகுமாரரென வும், அரசுகளைச் சிவனடியாரெனவும் இருவருக்குந் தாரதம மியந்தோன்றக் கூறியிருக்கின்றது. இதனல் பிள்ளையாரை அடியவரென்று கூறுதலும், அரசுகளைத் திருக்குமாரரென்று கூறுதலுங் கூடாதென்பது சித்தம்.

இதுகாறும் யாங்கூறிய நியாயங்களால் உரோமசமு னிவர் சம்பந்தராகப் பிறந்தாரெனவும், அவரது மூன்றும் வயதில் அவரில் முருகக்கடவுள் நுழைந்தாரெனவும், அத னல் அவர் சிவகுமாரரென்று படிக்கப்பட்டாரெனவும் பிர சங்கித்த சழக்குச்சைவரது மதம் தடியப்பட்டது. இனி ஞானசம்பந்தர் உமையம்மையினதுபாலை யுண்டகாரணத் தால் சிவகுமாரரென்று படிக்கப்பட்டதேயன்றி முருகக்

கடவுளது அவதாரவிசேடத்தா லவ்வாறு படிக்கப்பட்டதில்லையென்று பிரசங்கித்த பீடைச்சைவனையும் ஈண்டுவிசாரித்து ஒழிப்பாம். தாயினது முலைப்பாலைப் பிள்ளையேயன்றோ அருந்தத்தக்கது? உமையம்மையினது திருமுலைப்பாலை அவருக்கு மக்களிருவரிருக்கவும் அவர்களுக்கூட்டாது அவ்வம்மையார் தம்மில்விஜாதியான வோர்சிசுவுக்கு ஊட்டியது யாங்ஙனம்? பிள்ளையார் தமது இளையமைந்தராகாராயின், அவருக்கு அம்மையார் திருமுலையமுத மருத்தாரென்க. "தாதையாரையும்வெளியே தாங்கரியமெய்ஞ்ஞானம் தம்பால்வந்து-போதமுலைசுரந்தளித்த புண்ணியத்தாயாரையுமுன்வணங்கிப்போற்றி" எனவும், "நின்மகற்கு - விளங்கிழாய்முலைப்பா லருளெனக்கனகவில்லுடைவள்ளல்" எனவும்போந்த பிரமாணங்கள் பிள்ளையாருக்கு உமாதேவியார் ஜநகமாதாவாதல்கொண்டே திருமுலைப்பாலமுதம் பகிர்ந்தனர் என்று தெரிவிக்கின்றன. இந்தப்பிரமாணங்களுக்கு என்னகதிதேடுவது? உமாதேவியார் பிள்ளையாருக்கேயன்றி வேறு யாருக்கேனுந் திருமுலையமுத மருத்தியிருக்கின்றனரா? சிவனாரது மைந்தரென் றுபசரிக்கப்பெற்றவர் சேய்ஞலூர்ப்பிள்ளை யொருவரேயாம். ஞானசம்பந்தப்பெருமானை யவ்வாறு கோடற்கு ஒருவிதஹேதுவுமுண்டாகாமையால், அவரை யிளையபிள்ளையாரது அவதாரவிசேடத்தால் சிவகுமாரரென்று எல்லா நூல்களும் முறையிடுதலே முறைமையெனத் தெளிந்தின்புறுக. விரிக்கிற்பெருகும். இதுவரையில் எமது காழிப்பெருந்தகை விஷயமான வபராதிகளது மதங்களையெல்லா மெடுத்தநுவதித்துப் பூர்வபட்சஞ்செய்தோமாகையால், இனி யவ்வெம்பெருமானைப் பரமபதியென்றுகூறும் பிரமாணங்க ளிவையென்று ஈண்டுத் தெரிவிக்கின்றோம்.

## முக்கியப்பிரமாணங்கள்.

பிள்ளையார்தேவாரம்-திருத்தொண்டத்தொகை-நம்பியாண்டார் நம்பிகள்பிரபந்தம் - பெரியபுராணம் - திருவிளை

யாடற்புராணம்-சீகாழிப்புராணம்- திருநெல்வேலிப்புராணம்-திருப்புகழ்-சிற்றம்பலநாடிகள் பிரபந்தம்-சிவப்பிரகாசசுவாமிகள்பிரபந்தம் - சிதம்பரசுவாமிகள்பிரபந்தம்- உபமந்யுபக்தவிலாசம் கிருஷ்ணோபநிஷத்து - ஹாலாஸ்யமாஹாத்மியம் - காஞ்சீமாஹாத்மியம் முதலியனவாம். இவைகளை யெடுத்து முன்னர் யாம்வெளியிட்ட பிரபந்தங்களி லுதகரித்திருக்கின்றோம். இந்த நூலிலு மாங்காங்குச் சிறிதுபாகங்களை யெழுதியிருக்கின்றோம். இன்னுஞ் சிலமுக்கியபாகங்களை ஈண்டெடுத்துக்காட்டி, இதுவரையி லுதகரியாத நூதனப்பிரமாணங்களையுமினித்தேடி யுபகரிப்பாமென்க.

கந்தரந்தாதி, உசு வது - பாடலின் கருத்து

நெஞ்சமே! பாசதரனாகிய இயமனுன்னை நலிவுசெய்யாதபடிப் பிரமதேவனைச் சிறைப்படுத்தி, இந்திரனைச் சிறைதவிர்த்துச் சமணரிட்ட வேட்டையும் வாதையுஞ் செயித்த குமாரக்கடவுளது துணையை உறுதியாகச் சம்பாதித்துக் கொள் என்பதாம்.

உகூ - வது பாடலின் கருத்து

தம்முடைய தொண்டர்களுக்கு நன்னெறியாகத் தேவாரமென்னுந் தமிழ்வேதத்தை மொழிந்தருளினவரும், திவ்வியதலங்களைத் துதியாமலும், திருநீற்றுமகத்துவத்தைக் கைக்கொள்ளாமலுமிருந்த சமணர்கள் கழுவேறும்படி வாதினால் வென்றவருமாகிய ஞானசம்பந்தமூர்த்திகளென்னுங் குமாரக்கடவுளையன்றி வேறுதெய்வங் கிடையாது என்பதாம்.

௬௬-வது பாடலின் கருத்து

திருத்தணிகை - திருப்பரங்குன்று - திருச்செங்கோடு என்னும் மூன்று மலைகளிலு முறைபவனே! கூற்றையுதைத்த பரமசிவனது மைந்தனே! முன்பு பாண்டியனது கூனை நிமிர்த்தினதுபோல என்னை வருத்தும்படி மன்மதன்

கருப்புவில்லை வளைத்தலையுந் தீர்த்தருளல் வேண்டும் என்பதாம்.

௬௫ - வது பாடலின் கருத்து

எங்கள் குலதெய்வமான அழகனே! என்னுயிராகிய பெண்ணானவள் செந்திற்பதியான் யான் முறையிடுங் குறையைத் தணிக்கின்றானில்லை அவன் புயத்தைத் தழுவத் தரவுமில்லை என்றும் கூன்பாண்டியனது சுரந்தணித்தவனே என்றுஞ் சொல்லுகிறாள். சந்திரனையுந் தினந்தோறும் வெறுத்து மயங்குகிறாள். இனி யிப்படிப்பட்ட ஜநநமுற்று வருந்தாதவண்ணம் ஆண்டுகொள்ளவேண்டும் என்பதாம்.

௭௫ - வது பாடலின் கருத்து

நெஞ்சமே! உலகத்தார் நரகமெய்தாம லின்பத்தை யடையவும், ஆண்பனை பெண்பனையாகிப் பழத்தைக்கொடுக்கவும், சம்பந்தராயவதரித்துத் தேவாரத்தை யருளிச்செய்த குமாரக்கடவுளைத் துதியாமலும், அவரது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யநுட்டியாமலும், தவத்தில் முயலாமலும் தீவினைத் தொடர்பால் மும்மலப்பிணிப்புண்டு யாம் அவத்தின் முயன்று அஞ்சுகின்றனம் என்பதாம்.

அ௬ - வது பாடலின் கருத்து

சம்பந்தப்பிள்ளையா யவதரித்துச் சமணரைக் கழுவேறும்படிச் செய்தவனும், வள்ளிநாயகிக்குத் தலைவனுமாகிய குமாரக்கடவுள் தேவர்முதலியோரை வருத்திய சூரனை வெல்லும்படி அழகிய அரையிற்கட்டிய பீதாம்பரக்கச்சையினிடத்தில் மாதர்களெல்லாருந் தங்கடங்க ளிருதயங்களைக் கப்பமாகச் சமர்ப்பித்தார்கள் என்பதாம்.

௬௬ - வது பாடலின் கருத்து

ஞானசம்பந்தமூர்த்தியா யவதரித்துத் திருநீற்றாற் சமணமதம் பூண்டிருந்த பாண்டியனது கூனைமாற்றி, எந்தச்

சமயம் பெரிதோ என்னும் ஐயமகன்று சைவசமயமே பெரிது என்று நம்பும்படி ருக்வேதமாகிய தேவாரத்தை மொழிந்தருளிய குமாரக்கடவுளது மலையின்கண் வாழும் கன்னியினது கண் சமுத்திரமோ - தாமரையோ - விடமோ - அம்போ - வேலோ என்பதாம்.

க00 - பது பாடலின் கருத்து

நெஞ்சமே! தெய்வயானையினது வாகனமாகிய மேகம் நமது வறுமையைத் தவிர்க்கும். குமாரக்கடவுளது வேலாயுதம் நமக்குவரும் யமதண்டனையை நீக்கிவிடும். வள்ளிநாயகிக்கு மணவாளராகிய கந்தசுவாமி தமது திருவடித் தாமரையை நமக்குத்தந்தருள்வாராதலால், நீ அந்தக்கடவுள் முன்பு சம்பந்தப்பிள்ளையாயவதரித்த சீகாழியிற்சென்று அவரை வணங்கு என்பதாம்.

இந்தப் பிரமாணங்களால் சம்பந்தரது திருவிளையாடல்களே அவருக்கு மூலமாகிய குமாரக்கடவுளது மகிமையாகச் சிறந்திருக்கின்றன. இன்னும்பலவுள. இவைநிற்க. வேறு சிலபிரமாணம் ஈண்டெழுதுகின்றோம்.

திருச்செந்தூர்ப்புராணம்

"கழுமலத்துதித்தஞானக் கான்முளைவந்தான்வந்தான்
மழையெனக்கருணையென்பால் வழங்கியசெவ்வேள்வந்தான்
றழையுமுச்சங்கத்தேறுந் தலைமைப்பாவலவன்வந்தான்
செழுமணப்பெருமான்வந்தா னென்றனசின்னமெல்லாம்"

எனவும்,

"இருந்துருச்சொல்லிக்கொண்டி யாவர்க்குமிறைவணுகிக்
கருந்தடநெடுங்கட்செவ்வாய்க் கவுரிவார்முலைப்பான்ஞானத்
தருந்திவெஞ்சமணைமாய்த்த வாறுமாமுகங்கொண்டுற்ற
பெருந்தகையாங்குமாரப் பிரமசாரிப்பேர்பெற்றான்"

எனவும்

கூறுகின்றது. இதற்கு ஆக்கியோர் ஸ்ரீவென்றமாலைக் கவிராஜபண்டித சுவாமிகளென்றறிக. இப்பெரியோனது அரு

மைத் திருவாக்குக ளிரண்டனுள், முதல்வாக்கு ஸ்ரீமுருகக்கடவுள் திருக்கயிலையினின்றுஞ் செந்திப்பதிக்கு எழுந்தருளியகாலத்தில் விதந்தோதியபடி யறிக. இரண்டாவது வாக்குச் சுகப்பிரஹ்மரிஷி முருகக்கடவுளைப் பூசிக்கும்ஸந்தர்ப்பத்தில் சீகாழித்தலத்தில் அவர் திருக்கோலங்கொண்டெழுந்தருளிய காட்சியை விதந்தோதியபடி யறிக.

மயிலாசலபுராணம்

“நங்களங்கங்லியக்கடிந்தவன்
செங்களத்தினசுரரைச்செற்றவன்
* அங்களங்கமரியபெண்ணாக்கினோன்
மங்களங்கவிமாலையணிபவன்”

என்று கூறுகின்றது. * அங்கு + அள் + அங்கம் எனச்சேர்த்து, அவ்விடத்தில் அள்ளிய எலும்பைப் பெண்ணாக்கினோன் என்று பொருள்கொள்க. முருகக்கடவுளது துதிகளின் மாத்திரமன்றி அவரது புராணங்களினும் அவர் சம்பந்தராயவதரித்தருளிய வற்புத விசேடங்கள் பெறப்படுகின்றமையால், எமது ஞானசம்பந்தரது பரத்துவம் வேரூன்றிப் பொலிவெய்தியதுணர்க.

ஸ்ரீபகழிக்கூத்தர்திருவாக்காகிய

திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்-சப்பாணிப்பருவத்தில்

‘பௌவமெறிகடலாடையுலகிலொருவேடுவென்பறவைக்குநிறைபுகுந்த
பாத்தியன்பாவையுமியற்குலச்சிறையும்பணித்தருளமதுரைபுக்குத்
தெவ்வரிடுதிருமடத்தெரிசெழியனுடலுறச்சென்றுபற்றலுமெவர்க்குந்
தீராதவடவையனல்வெப்புமுதுகூனுந்திருத்தியமண்வாதுவென்று
வெவ்வழலிலெழுதியிடுமேடும்பெருக்காற்றுவிட்டதமிழேடுமொக்க
வேகாலெதிரோகுடக்கேறவெங்கழுவில்வெந்திறற்பதகரேறச்
சைவநெறியீடேறவருகவுணியக்குழவிசப்பாணிகொட்டியருளே
சமரமுகரணவீரபரசமயதிமிராரிசப்பாணிகொட்டியருளே. ”

எனவும்,

வரானைப்பருவத்தில்

"கலைதெரிபுகலி வளமுறமருவு கவுணிய வருகவருகவே"

எனவும்

சிற்றிற்பருவத்தில்

"கன்றுமமணர்கழுவேறக் காழிப்பதியில்வந்துதித்துக்
கள்ளப்பரசமயக்குறும்பர் கலகமொழித்துக்கட்டழித்தாய்
அன்றுதொடுத்துன்வழியடிமை யடியேன்சிற்றிலழியேலே
யலைமுத்தெறியுந்திருச்செந்தூ ரரசேசிற்றிலழியேலே"

எனவும்

போந்தவாறறிக. இவற்றானும் எமது பிள்ளையார் பரமகார ணப்பொரு ளாயினரென்ல் துணியப்பட்டது.

## திருவேதத்தூர்ப்புராணம்

பராசர்வேள்விச்சருக்கத்தில்

"சூரழித்தமரர்துன்பந் துடைத்தவன்றூர்த்தர்வாழு
மூரழித்தவன்சேயிந்த வுலகிலந்தணனுய்வந்து
பாரழித்தெங்குந்தாமாய்ப் படர்ந்தசாக்கியரையெல்லாம்
வேரழித்தரியசைவம் வீறவீண்டெய்துமாதோ."

எனவும்

தலமகிமைச்சருக்கத்தில்

"ஆயவராங்கிருந்துதவம் புரிகின்றாராறுமுகத்தோன்
றூயகுணசம்பந்த னெனத்தோன்றிச்சொற்பாவாற்
காயொருபாற்பூவொருபாற் கதித்தபனையினிற்காட்டி
மாயவினைச்சமணழிக்கும் வகைநோக்கிமனந்தெளிந்தார்"

எனவும்

சமணர்கழுவேறியசருக்கத்தில்

"சூரர்தங்குலமெலாந் தொலைத்தவேற்கர
வீரனந்தணர்குல விடலையாகியிப்
பாரினிலமணர்பாழ் படவொராண்பனை
வேரியங்காய்தர விளம்பும்பாவெனு"

எனவும்

"அந்நாளமரர்சிறைமீட்ட வடலார்செவ்வேள் புலியுயர்த்தோ
னன்னாட்டினிற்சீகாழியெனு நகரின்மறையோர் குலத்துதித்து
மின்னார்மணிப்பூணுமைமுலைப்பால் விரும்பியருந்தித் தெளிவுற்றுப்
பொன்னார்மதில்சூழ்கூடனகர் புகுந்தானெந்தாமாண்டதனில்"

எனவும்

போந்தபகுதிகளால் சம்பந்தப்பிள்ளையார் சிவகுமாரரென்பது தெற்றெனவெளியாகியது.

ஹாலாஸ்மாஹாத்மியம்

"புத்ரதாமகமத்தஸ்ய - சரஜந்மாசிவாஜ்ஞயா"

என்று கூறுகின்றது. இதில், சிவபாதவிருதயருக்குச் சுப்பிரமணியக்கடவுள் சிவாஜ்ஞையால் புத்திரராந்தன்மையையடைந்தார் என்று பெறப்படுகின்றது. இதனை முன்பும் எமது தர்ப்பணத்திற் பிரகாசப்படுத்தியிருக்கின்றோம். இஃதொருவசன மேயன்றி ஷை ஹாலாஸ்யத்தில் பலவசனங்கள் முருகக்கடவுளது அவதாரமாயுள்ளவர் சம்பந்தரென்று போதித்தலால், அவற்றையும் ஈண்டு எடுத்துக்காட்டிப் பிரகாசப்படுத்துவாமென்க.

"ஸர்வஜ்ஞகுஹரூபாத்ய.லோகாநுக்ரஹகாரக"

என்னும் வசனமானது பிள்ளையாரை இயற்கையறிவும், முற்றறிவுமுடையவரெனவும், குஹரூபரெனவும், உலகத்துக்கு அநுக்கிரகத்தைச்செய்பவரெனவுந் தெரிவிக்கின்றது.

"ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தநாமா-ஸுப்ரஹ்மண்யாம்சஸம்பவ:"

என்னும் வசனமானது திருஞானசம்பந்தப்பிள்ளையார் சுப்பிரமணியக்கடவுளது அமிசமாய் அவதரித்தவர் என்று தெரிவிக்கின்றது.

"துஷ்டநாம்நிக்ரஹார்த்தாய-சிஷ்டாநாம்ரக்ஷணாயச
ஆவிர்ப்பூத:குமாரோய-மாயாதோகுஹவிக்ரஹ:"

என்னும் வசனமானது துஷ்டர்களை நிக்கிரகிக்கவும், சிஷ்டர்களை அநுக்கிரகிக்கவும் திவ்யமங்களவிக்கிரக மூர்த்தியாகிய

குகப்பெருமான் குழந்தையாய் அவதரித்தனர் என்று தெரிவிக்கின்றது.

"ச்ருணுவாசம்குரோஸ்வாமிந்-ஆவயோர்க்குஹவிக்ரஹா"

என்னும் வசனமானது மங்கையர்க்கரசியாரும், மந்திரியாரும் பிள்ளையாரைநோக்கி, குகமூர்த்தியினது விக்கிரகமாயுள்ளவரே! அடியேங்களது விண்ணப்பத்தைக் கேட்டருளல் வேண்டும் என்று பிரார்த்தித்ததாகத் தெரிவிக்கின்றது.

"ஸ்வர்ணரத்நமயம்சாரு-சாருரோஹகுஹாம்சக:"

என்னும் வசனமானது சுவர்ணத்தினாலும், இரத்தினத்தினாலுமமைந்த பீடத்தில் குஹாம்சராகிய பிள்ளையார் ஆரோகணித்தருளினர் என்று தெரிவிக்கின்றது.

"ஜ்ஞாநபூர்ணம்ப்ரசம்ஸந்தி-ஸாக்ஷாத்குஹஇதிஸ்வயம்"

என்னும் வசனமானது பிள்ளையார் நெருப்பில் ஏடுபோட்டுப் பச்சையாயெடுத்தபோது அவ்வதிசயத்தை நேரேகண்ட பிரஜைகள் இவர் ஸாக்ஷாத்து முருகக்கடவுளேயென்று வந்தித்தார்களென்று தெரிவிக்கின்றது.

"ந்ருபாயாஸ்ஸஜ்ஜநாஸ்ஸர்வே ப்யஸஜ்ஜநஹரம்குஹம்"

என்னும் வசனமானது அரசன் முதலிய ஸர்வமானஸாதுக்களும் துஷ்டர்களாகிய சமணர்களைக் குகப்பெருமான் அழித்தனரென்று வந்தித்ததாகத் தெரிவிக்கின்றது.

"பூர்ணசந்த்ராபவதநோ-நிஷ்களங்கோநிர்மல:
பஸ்மாபிராமபாலஸ்த்வம் - ப்ரதிபாஸிகுஹோயதா"

என்னும் வசனமானது விருத்தவேதியராய்வந்த சிவபெருமான் பிள்ளையாரைநோக்கி, ஓ் குழந்தாய்! நீ பூரணசந்திரன் போன்ற வதனமுடையவனும், நிஷ்களங்கனும், நிர்மலனும், விபூதியினால் ரமணீயமாய் விளங்கும் நெற்றியுடையவனும், குகனைப்போன்றவனுமாக விளங்குகின்றாய் என்று பிரஸ்தாபித்ததாகத் தெரிவிக்கின்றது.

"த்வஞ்சஸர்வஜ்ஞஏவாஸி-குஹாம்சத்வாத்மஹாந்த்ருவம்
அநுபூயாதுலம்ஸௌக்யம்-அந்தேகுஹமவாப்ஸ்யஸி"

என்னும் வசனமானது சிவபெருமான் பிள்ளையாரைநோக்கி நீ ஸர்வஜ்ஞனாயிருக்கின்றனை, குஹாம்சத்வமுள்ளவனாதலால் பெரியவனென்பதுந் திண்ணம். இங்கு நீ அதுலமான சௌக்யத்தை யநுபவித்து, முடிவில் உன்னுடைய குஹரூபத்தை யேயடைவாய் என்று அருளிச்செய்ததாகத் தெரிவிக்கின்றது.

இந்த வசனங்களால் எமது காழிப்பிள்ளையார் முருகக்கடவுளது அவதாரமென்பது நிஸ்ஸந்தேகமாய் வெளிப்பட்டதுணர்ந்தவர்கள் இனி வீண்விபரீதம்பேசத் துணியார்கள். இவற்றுள், சிலவசனங்கள் குஹாம்சனென்றதென்னை யெனின், குகப்பெருமான் ஞானக்கிரியாஸ்வரூபனென்பது வேதத்தின் றுணிவு. அவர் ஞானசம்பந்தனென்று திருநாமந் தாங்கி வெளிவருகையால், ஞானம்சம் அதிகரித்தது என்பதனையே யுணர்த்தியவாறறிக. இனிமற்றொரு வசனத்தில் "குகனைப்போலிருக்கின்றாய்" என்று கூறியிருப்பதென்னையெனின், அவ்வாறுகூறினவர் வேதியர்கோலங்கொண்ட சிவபெருமான். ஏடு வைகையிலிட்டபிள்ளையாருக்கு எதிர்தோன்றிய சிவபெருமான், சிவரூபமாகத் தோன்றாமல் வேதியர்கோலமாகத் தோன்றினமையால், மறைந்துநின்ற கோலத்துக்கேற்ப அவ்வாறு கூறியதெனவறிக. "குஹோயதா,, என்று ஈண்டுப் படிக்கப்பட்டபடியே திருவிளையாடற்புராணத்தில் "என்மைந்தனுமிளையோனெப்பாய்,, என்று படிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கும் எமது ஞானசதுஷ்டயதர்ப்பணத்தில் பொருளமைதியை யினிது புலப்படுத்தியிருக்கின்றோம். இவற்றில் எமதுபிள்ளையார் பரமபதியென்பது பசுமரத்தாணியறைந்தாற்போல நாட்டப்பட்டது. இதுநிற்க.

ஸ்ரீமதுரைமகாசந்நிதானம்எமக்குவிடுத்தருளிய

ஸ்ரீமுகம்வருமாறு:

திருஞானசம்பந்ததேசிகசுவாமிகள் கிருபாகடாக்ஷத்தினாலே சமஸ்ததிவ்வியமங்கள குணகணாலங்கிருத வித்வசிரோமணியாகிய மகாபுருஷசெல்வச்சிரஞ்சீவி நமது சோமசுந்தரநாயகரவர்கட்கு.

சிவஞானமும் தீர்க்காயுளுஞ் சிந்திதமனோரத சித்தியும் சந்தானசமர்த்தியும் அரோகதிடகாத்திரமும் ஐசுவர்யாதிக்கமும் தேவகுருப்பிரசாதமும் அபிவிருத்தியாகுகவென ஆசீர்வாதம்.

தங்களுடைய நித்தியானந்த வைபவங்களை யடிக்கடியறிய விரும்புகின்றோம்.

தாங்க ளன்புடனனுப்பிய ஞாநசதுஷ்டயதர்ப்பணம் வந்து பார்வையிட்டுப் பெருமகிழ்ச்சி யடைந்தோம்.

பரமபதியாகிய சிவபிரானுடன் அபேதராய் விளங்குகின்ற முருகக்கடவுளின் திருவவதாரமாகிய நமது சற்குருநாதசுவாமிகளைப் பத்தாத்மாவென்று அஞ்சாது எழுதத் துணிந்தவரது அறியாமையைப்பற்றி வியசனிக்கின்றோம்.

கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து பரமாசாரியசுவாமிகளிடத்துப்பேரன்புபூண்டொழுகும் தங்களுக்குயாதார்த்தியவிஷய ஸ்தாபநத்திலிருக்கும் பேராற்றலை முன்னரே நன்குணர்ந்திருப்பராயின், அங்ஙனம் எழுதத்துணிந்திரா ரென்பது திண்ணம்.

பார்வதீஸ்தந்யபாநலப்த சிவஞானசம்பந்தப்பிள்ளையாராகிய நமது பரமாசார்யசுவாமிகள் ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளென்றே மகான்கள் பலராலும் பலவிடத்தும் பலகாலுங் கூறியிருக்கின்ற விதிவாக்கியங்களை யெடுத்துத்தொகுத்து உதாகரித்துஸ்தாபித்த தங்களுடைய திவ்வியமதுரச்

செந்தமிழ்வாசகம் அஞ்ஞானதிமிராந்தர்களாகிய உலகத்தவர் கட்கு ஓர் அருமைபொருந்திய ஞானாஞ்சனமாயிருக்கின்றது.

தங்களுடைய திவ்வியமங்கள குணகணங்களைப்பற்றி மகாபுருஷசெல்வச்சிரஞ்சீவி நமது ராஜா பாஸ்கர சேதுபதி மகாராஜாஅவர்கட்கு நிரம்பச்சொல்லி யிருக்கின்றோம்.

நாம் சாமீபத்தில் மதுரைக்குப்போகிறபடியால் அங்கிருந்தும் பின்ன ரெழுதுவதாயிருக்கும்.

ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவரரைப் பிரார்த்தித்து மகதைசுவர்ய விபூதியனுப்பினோம். திருவருளே கவசமாகத் தரித்துக்கொண்டு நித்தியானந்த செல்வச்சிரஞ்சீவியாய்ப் பெருவாழ்வில் வளர்ந்தோங்குக.

கர௵ தனுர்௴ 20௳.
இராமேசுவரம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்ததேசிக:

இதில், ஸ்ரீமகாசந்நிதானத்தினது ஹ்ருதயம் இனிது வெளிப்பட்டது. இந்தமகாசந்நிதானம் ஆதீனத்துக்குரிய பொதுப்பெயராகிய ஸ்ரீஜ்ஞானஸம்பந்ததேசிகசுவாமிகளென்று பிரசித்தியடைந்திருப்பினும், இம்மகாசந்நிதானத்துக்குச் சிறப்புப்பெயராயுள்ளது ஸ்ரீசுவாமிநாததேசிகமூர்த்திகளென்பதாம். இவ்வமலதேசிகமூர்த்திகள் திருவுளம்பற்றிய வாய்மையை யாமெடுத்துக்காட்டினதன்றியும் வேறொரு பிரபல சாட்சியையு மீண்டெடுத்துப் பிரஸ்தாபிக்கின்றோம். ஷை ஆதீனத்துக்குரிய அநாதிஸித்தமான பிருதாவளியில் “பரசிவ புத்ரரத்ந குமாரகுருமண்ய துலாவதார ஸ்ரீ ஸர்வஜ்ஞபீடாரூட ஸ்ரீஜகத்குரு ஸ்ரீஜ்ஞாநஸம்பந்ததேசிகசுவாமிகள்,, என்று படிக்கப்பட்டிருக்கின்றது. இன்னுமித்தகையவாதரவுகள் பலவுள. இதுகாறும் யாம்காட்டியயாவும் ஞாநசம்பந்தப்பிரானரது பரதத்துவநிலையை நன்குபோதித்தலால் இம்மட்டில் யாம் விசிராந்தியடைந்து வேறுவிஷயங்களை இனிப்பிரவசனிப்பாம்.

இவ்வமலதேசிகப்பிரானேயன்றி யேனையாசாரிய மூர்த்திகளும் சிவாமிசபூதர்களென்று யாம் படித்துவரு மருமையைப் பகைத்தெழுமறிவிலிகள் சிரங்கவிழுமாறு ஈண்டுச்சில வரைகின்றாம்.

## திருநாவலூர்ப்புராணம்

"உரிமைசவுந்தரியளித்தசடையர்சிகாமணிசூடாமணியென் றோது, மரியசுதர்மூவர்களிற்சடையனாரெனும்பெயரோனார்ந்தசீல ன், பிரியமுடனில்லறத்தினியற்கைவழுவாதியற்றும்பெற்றியாளன், றருமகவின்மையினான்மெய்தளர்ந்துசிவனைக்கருதித்தவஞ்செய்கின் றோன்,,

"மனைவியிசைஞானியொடுமணங்கமழ்மென்மலரணையில்வ திந்துநெஞ்சங், கனிவினொடுமகப்பேறிலாமையினைக்குறித்துருகிக் கழறுங்காலைப், பனியிருளோடகற்றிடுவெம்பகலவன்றன்கிரணமதி ற்பட்டபைங்கூழ், நனிதழைப்பமுகில்பொழிந்ததெனவொளிர்சோ தியிலிருவர்நாப்பண்மாதோ,,

"ஆன்றரவிமதியிரவிவாரமுத்திரத்தினிசியடர்சேவோரை, மூன்றுவயதொடுமதலைபற்பலபூடணமிலங்கமுக்கட்டேவன், றோ ன்றினனென்றுளமகிழ்ந்துசடையனார்கரத்தெடுத்துத்தோளிற்சேர் த்தார், வான்றருமென்மலர்சொரிந்துவளவார்துந்துமிமுழக்குவா னோரார்த்தார்,,

என்று கூறுகின்றது. இதில், ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் திவ்யாவதாரம் இனிது பரிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றது. மூ ன்றுவயசு குழந்தையாய் முக்கண்மூர்த்தியே அவதரித்தா ரென்று துதிக்கப்பெற்ற எமது சுந்தரமூர்த்தி சுவாமிகளு க்கு மாத்ருகர்ப்பவாஸம் பெறப்படாமையை யினியேனும் பூர்வபட்சிகள் சிந்தித்தடங்குவாராக. இப்படியே யேனை யாசாரியர்களிடமும் விசாரித்துத் தெளிந்திடுக. ஆயினிவ் வாறு ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் விதந்தோதாமை யென்னை யெனின், ஒருவிஷயத்தைப் பலநூல்கள்கூறுமிடத்துச்சில

நூல்கள்சுருங்கக்கூறும், சிலநூல்கள் விளங்கக்கூறும். எல்லாநூல்களும் ஓரேவிதமாக ஏன் கூறவில்லையென்று கடாவுவது கூடாது. விஷயவிரோத முண்டாகாமையே முக்கியமாய்க் கவனிக்கத்தக்கது. சேக்கிழார்நூலில் சுந்தரமூர்த்திகளுக்கு மாத்ருகர்ப்பவாஸமும், திருநாவலூர்ப்புராணத்தில் அவருக்கு மாத்ருகர்ப்பவாஸமின்மையுங் கூறியது விரோதமாகாதோவெனின், இவ்வாறு சேக்கிழார் கூறியதின்று. அதவா அவர் கூறியதாகக்கொள்ளினுங் குற்றமில்லை. சேக்கிழார்பெருமான் உயர்வாகக்கூறியதைத் திருநாவலூர்ப்புராணம் தாழ்வாகக்கூறியதுண்டாயின் யாம்வருந்தலாம். அங்ஙன மின்மையின், எதிரிமனோரதமீடேறுவது துஸ்ஸாத்யமாயினதறிக. ஆயின், சேக்கிழார் தாழ்வாகக்கூறியதைத் திருநாவலூர்ப்புராணம் உயர்வாகக்கூறியதோவெனின், அதுவுமின்று. சேக்கிழார் உயர்வாகச்சுருக்கிக்கூறியதையே திருநாவலூர்ப் புராணம் உயர்வாகவிளக்கிக்கூறியதென்றறிக. ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளும், அவரதுசத்திகளாகிய பரவையார்சங்கிலியார் என்னு மிருவர்களும் மாத்ருகர்ப்பவிகீனர்களென்பதையும், திருநாவுக்கரசுசுவாமிகள் கர்ப்பவாஸம்பெருதவரென்பதையும் ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் விளக்கியவாறும், ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் மாத்ருகர்ப்பஸ்பரிசமில்லாதவரென்பதை ஹாலாஸ்யமாஹாத்மியம் - திருவிளையாடற்புராணம் - வாதவூரடிகள்புராண முதலியநூல்கள் கூறியவாறும் யாம் எமது ஆசாரிய பிரபாவத்தி லினிதுபிரகாசப் படுத்தியிருக்கின்றோம், ஆண்டுக்கண்டுகொள்க. இதுநிற்க.

ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் திருவாக்கிற்பெறப்படாத அநேகவிஷயங்கள் இதர புராணங்களிற் பெறப்பட்டிருக்கின்றன. அதனால், அவை பிரமாணமாகாமலொதுங்குமியல்பினவாமோ? அவற்றுட்சிலவற்றை யீண்டுக்கூறுகின்றோம்.

1. ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு முதுகுன்றநாதர் கொடுத்தருளிய பன்னிரண்டாயிரம் பொன்னுக்கு அவர் சுவாமியினிடம் மாதிரிப்பொன்வாங்கிக்கொண்டு, கிடைத்தபொன்னை மணிமுத்தாநதியிற்போட்டு, பின்னரதனைக் கமலாலயதீர்த்தத்திலெடுத்து, அங்கெழுந்தருளியிருந்த விநாயகரிடங்காட்டித் தன்னிடமிருந்த மாதிரிப்பொன்னுக்குச் சரியாக மாற்றுரைபார்க்கச்செய்து ஒப்புக்கொண்டாரென்று சில புராணங்கள் கூறுகின்றன.

2. சோமாசிமாறநாயனாரிடம் ஸ்ரீசிவபெருமானைப் போகும்படி ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் வேண்டிக்கொண்டவாறு அந்நாயனாரியற்றிய யாகத்தில் சுவாமி சண்டாளரூபந்தாங்கி மதுக்குடமும், மாம்ஸகண்டமு மேந்திச்சென்று காட்சிகொடுத்தருளினாரென்று சிலபுராணங்கள் கூறுகின்றன. சுவாமி மதுக்குடமேந்திச் சென்றபோது அது பொங்கியஇடம் பொங்குசாரூயநல்லூர் என்று பிரசித்தியடைந்திருக்கின்றது.

3. ஸ்ரீகாஞ்சிப்பதியில் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் சென்றபோது சுவாமி ஒருவயலிற்சென் றொளித்திருந்தனர். அங்குத் தேடிச்சென்று சுவாமியைக்கண்டுபிடித்து அவரிடத்தில் சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் திருவொற்றியூரிலிழந்த இரண்டுகண்களிலொருகண்ணைப்பெற்றனர் என்று சிலபுராணங்கள்கூறுகின்றன. சுவாமியொளித்தஇடம் இப்போது கள்ளக்கம்பன்பட்டடை என்றுபிரசித்திபெற்றிருக்கின்றது. இந்தமஹோத்ஸவம் இப்போது க்ஷேதலத்தில் நடந்துவருகின்றது.

4. திருப்பேரூரில் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் சென்றபோது சுவாமியும்அம்மையுங் கோயிலினின்றும்பெயர்ந்து ஊருக்குவெளியில் ஒருவயலிற்சென்று களைபறித்துக்கொண்டிருந்தார்கள். கோயிலைவிட்டுப்போகும்போது நந்தியிடத்தில் நாங்கள் போயிருக்குமிடத்தைச் சுந்தரமூர்த்திக்குச் சொல்லவேண்டாமென்று அம்மையப்பர்கள் சொல்லியிருந்தார்

கள். சுந்தரமூர்த்திகள் கோயிலில் சுவாமியையும், அம்மையையுங்காணாமையால் அம்மையப்பர்களெங்கேயென்று நந்தியைக்கேட்டனர். நந்திபகவான் சுவாமியாணையைக் கடக்கமாட்டாமலும், சுந்தரமூர்த்திகளுக்குப் பொய்சொல்லமாட்டாமலும் கேட்டவருக்குப் பதில்சொல்லஇசையாதவர்போல அம்மையப்பர்களொளித்திருக்குந்திசையாக முகத்தைத்திருப்பிக்கொண்டனர். அஃதுணர்ந்த சுந்தரமூர்த்திகள் சுவாமியொளித்திருந்த வயலிற்சென்று அங்குக்களை பறித்துக்கொண்டிருந்த பள்ளனும், பள்ளியுமே சுவாமியும், அம்மையுமென்றறிந்து திருப்பதிகமோதித் துதித்தனர். சுவாமிமகிழ்ந்து சுந்தரமூர்த்திகள் தரிசிக்குமாறுதாண்டவதரிசனஞ் செய்தருளினர் என்று சில புராணங்கள் கூறுகின்றன. ஷேதலத்தில் இப்போது இந்தமகோத்ஸவம் நடந்துவருகின்றது.

5. ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் திருவீங்கோய்மலைக்குச் சுவாமிதரிசனத்தின்பொருட்டுச் சென்றனர். அங்குச் சிவபெருமான் திருக்கோயிலிலில்லை. அப்போது சுவாமியெங்கேயென்று சுற்றிலுந்தேடினார். அதற்கடுத்த வொருபுளியமாத்தின்பேரில் சுவாமியொளித்திருக்கக்கண்டார். பின்பு சுவாமியைநோக்கிப் பொன்வேண்டுமென்றார் வன்றொண்டர். பொற்புளியங்காயறுத்து முன்னேபோட்டார் சிவபெருமான். அதையெடுத்துக்கொண்டு மகிழ்ந்து திருப்பாச்சிலாச்சிராமஞ்சென்றுதொழுதார் சுந்தரமூர்த்திகள். அங்கு வணிகராயெதிர்தோன்றினர் சிவபெருமான். அவரிடம் பொற்புளியங்காயைக் கொடுத்து மாற்றுணாபார்க்கக் கேட்டனர் நம்பியாரூரர். அவ்வாறுபார்த்து மாற்றுயர்ந்த பொன்னிதுவென்றார் சிவபரஞ்சுடர். அப்பரஞ்சுடர்ப்பிரான் "மாற்றறிவாணர்" என்று பிரசித்தியடைந்திருக்கின்றனர் இன்றுமத்தலத்தில். அங்கேநின்றும் சுந்தரமூர்த்திகள் மீண்டும் ஈங்கோய்மலைக்குவந்து முற்படியே புளியமரத்தின்பேரிலேயேகண்டார் சுவாமியை - அவ்வாறுகண்டவர் சுவாமியைப் பார்த்துப் "பொன்னம்பலவாணரோ புளியங்காய் பறிக்கிறீரோ" என்றார். அதற்குச்சுவாமி "இல்லைகாணும் புலவரோ நெருப்புக்காய்பறிக்கிறோம்" என்று மரத்தி

லிருந்து சிலகாய்களை யுகுத்தார். அந்தக்காய்களைச் சுந்தரமூர்த்திகளெடுத்து நறுக்கிப்பார்த்தனர். அவை புகைந்தும், கரிந்தும்போயின. இவ்வாறு சுந்தரமூர்த்திகளோடு சுவாமி திருவிளையாடல்புரிந்தனர் என்று சிலபுராணங்கள் கூறுகின்றன. இந்தத்தலத்தில் புளியமரங்கள் காய்த்துப்பழுக்கிறசமயத்தில் கரிந்து அவலமாகின்றன. இன்று மிவ்வநுபவத்தை யங்குக்காணலாம்.

6. விறன்மிண்டநாயனார் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளிடம் வைத்த பகைகாரணமாக அவரது ஞாபகத்தை யுண்டுபண்ணுந் திருவாரூர் என்று பிரஸ்தாபிக்கும் அடியார்களதுகாலை வெட்டு நியமமேற்கொண்டு அடியார்களைப் பூசித்துக்கொண்டுவந்தார். ஸ்ரீதியாகராஜவள்ளல் ஒருநாள் அடியவர் வேடங்கொண்டு அவரிடஞ்சென்று தமதுபதி செல்வத் திருவாரூர் என்று கூறுதலும், அவரை விறன்மிண்டர்காலை வெட்டவந்தனர். அப்போது சுவாமி பலஇடங்களிலோடித்திரிந்து திருவாரூரெல்லையை யடைந்தனர். அவரைத் துரத்திச்சென்றஅன்பரு மவ்வெல்லையிற் றமதுதிருப்பாதத்தை வைத்துவிட்டனர். பின்பு அவ்வன்பர் தமதுநியமப்படித் திருவாரூரெல்லையில்வைத்த தமதொற்றைக்காலை வெட்டப்புகுதலுந் தியாகராஜப்பெருமான் அவர்முன்றோன்றித் தடுத்துத் திருவருள்புரிந்தனர் என்று சிலபுராணங்கள் கூறுகின்றன.

7. திருஞானசம்பந்தசுவாமிகள் விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பியமளித்தனர் என்று சிலபுராணங்கள் கூறுகின்றன.

8. தீட்டையென்னும்பதியில் ஸ்ரீமத் அப்பர்சுவாமிகளது திருவடிக்கபராதமிழைத்த பாஞ்சராத்திரிகள்பொருட்டு அவர்களது பெருமாள்கோயிலை வெள்ளங்கொண்டு போகும்படித் திருஞானஸம்பந்தசுவாமிகள் தேவாரத் திருப்பதிகமோதியருளினரென்று சிலபுராணங்கள் கூறுகின்றன.

9. திருஞானசம்பந்தசுவாமிகள் பாலைநிலத்தை நெய்தநிலமாகும்படித் தேவாரத்திருப்பதிகமருளிச்செய்தனர் என்று சிலபுராண்ணங்கள் கூறுகின்றன.

10. மதுரைக்குச்சமீபத்தி லொருசிவக்ஷேத்திரத்தில் திருஞானசம்பந்தசுவாமிகள் சுவாமிதரிசனஞ் செய்யச்சென்றனர்.

அங்கு எல்லாம் இலிங்கவடிவமாய்க் காண்டலால், திருவடியைவைத்து உள்ளேபோகவிசையாது வெளியிலேதானேயிருந்துவிட்டனர்பிள்ளையார். அஃதறிந்தசுவாமி அம்மையாரைப்பார்த்து உன்மகன் வெளியிலிருப்பது அறிந்திலையோவென்றுகூறினர். அம்மையா ருள்ளம்பதைத்து வெளியிலோடிவந்துபார்த்துத் தமது மைந்தனுரையெடுத்துக் கையிலிடுக்கிக்கொண்டு உள்ளேசென்று சுவாமிபக்கலிருந்தனர். அப்போது அவரது திருக்கரத்திலிருந்தபடியே பிள்ளையார் திருப்பதிகமோதியருளினர். அவ்வம்மையாருக்குப் "பிள்ளையிடுக்கியம்மை,, என்பது திருநாமம். இவ்வற்புத சரித்திரத்தைச் சிலபுராணங்கள் கூறுகின்றன.

[ 11. திருப்பூந்துருத்தியில் திருஞாநசம்பந்தசுவாமிகள் சுவாமிதரிசனஞ் செய்யப்போயினர். அப்போது சுவாமி பிள்ளையாரை முத்துச்சிவிகையிலிருந்தகோலமாகவே பார்த்துமகிழவேண்டி அவர் கோபுரவாயிலில் சிவிகையினின்று மிறங்குவதன்முன்னர் நந்தியை விலகும்படிக் கட்டளையிட்டனர். அவ்வாறே நந்திவிலகினர். அப்படியே யிப்போதும் அந்தத்தலத்தில் நந்திதேவர் வேறுஅங்கணத்திலிருக்கின்றனர். இந்தச்சரித்திரம் சிலபுராணங்களிற் சொல்லியிருக்கின்றது.

12. திருவோத்தூரில் திருஞாநசம்பந்தசுவாமிகள் சமணவாதம்புரிந்து அவர்களைக் கழுவேற்றியருளினரென்றும், அந்தத்தலத்தில் பராசரமுனிவரதுசாபத்தா லிருவாரக்கர் வேலமரமாய்க்கிடந்ததை அந்தப்பிள்ளையார் நிவாரணஞ்செய்தருளினரென்றுஞ் சிலபுராணங்கள் கூறுகின்றன.

13. திருநெல்வேலித்தலத்தில் திருஞாநசம்பந்தசுவாமிகள் அகஸ்தியபகவானுக்கு அருள்புரிந்தும், சமணர்களோடுவாதித்துவென்று சைவஸ்தாபனஞ்செய்தும் அந்தக்ஷேத்திரத்தில் தனியாலயங்கொண்டு எழுந்தருளி யிருக்கின்றாரென்று சிலபுராணங்கள் கூறுகின்றன.

14. இன்னுமித்தகைய திவ்யசரித்திரங்கள் பலதலங்களில் நடந்ததாகப் பலபுராணங்கள் கூறுகின்றன.

இவைகளைப் பூர்வபட்சிகள் பொய்யென்று கூறுத ல் கூடுமோ? இவைகளைப் பொய்யென்று மறுக்கப்புகின், பெரியபுராணங்கூறிய ஏனையமகிமையையும் பொய்யென் று புறச்சமயிகள்கூறும் வாதம் நிலைபட்டுப்போம். என் னை? பெரியபுராணத்துடன் ஏனையநூல்களைச் சமப்படுத்து வதெனின், யாம் பெரியபுராணம் ஏனையநூல்களோடு சம மானது, தாழ்ந்தது என்று வாதிப்பதில்லை. யாம் கூறுவ து (பெரியபுராணங்கூறும்ஆசாரியர்களதுமகிமையைநாம் கைக்கொள்வதுபோல ஏனையநூல்கள்கூறும் ஆசாரியர்கள் துமகிமையையுங்) கைக்கொள்ளவேண்டுமென்பதேயன்றி வேறில்லை. பெரியபுராணங்கூறுததை ஏனையநூல்களால் நாம் ஏன் கைக்கொள்ளவேண்டுமெனின், அப்படிக் கை க்கொள்ளக்கூடாது என்று பெரியபுராணமுரைத்திடா மையால், மேலாசங்கை பயன்பெறுதென்க. ஏனைய நூல்க ள்கூறினவை (நாமங்கீகரிக்கத்தக்க) ஆவசியகமாயினவாயி ன், அவைகளைப் பெரியபுராணம் ஏன்கூறவில்லையென்று பூர்வபட்சிகள் வாதிக்கலாம். சேக்கிழார்சுவாமிகள் செய் தருளிய பெரியபுராணத்தில் ''மரபுதெரியாப்புராண மவை யோரேழு,, எனவும், ''ஊரறியாக்கதையேழு,, எனவும், ''பே ரறியாக்கதையெட்டு,, எனவும் ஏற்பட்டவுண்மைக்கு யாது செய்வது? அடியவர்களைத் தெரிந்துசொல்லவந்தவிடத் தில், அவ்வடியார்களில் சிலரது மரபுதெரியாமலும், சில ரது ஊர்தெரியாமலும், சிலரது பேர்தெரியாமலுஞ் சேக் கிழார்சுவாமிகள் விட்டுவிட்டாரென்று நாம் அங்கீகரித்த லால், மேல் யாம்வெளிப்படுத்திய சரித்திரங்களையும் இதுகாறும் வெளிப்படாதசரித்திரங்களையும் அவரெழு தாமல்விட்டதற்குக் காரணம் இதுவென்று தெளிவது எ ளிதாமென்க. அறியாதார்சிலர் மரபுதெரியாக்கதைக்கு மரபுசொல்லக்கூடாதகதையென்று சமாதானங் கூறுகின் றனர். தவறானமரபு என்பது அவர்கருத்து. அங்ஙன மாயினாகுக. ஊர்சொல்லக்கூடாதகதை, பேர்சொல்லக்

கூடாதகதை என்பதுமுண்டாங்கொலோ? ஊரறியாக்கதைக்கும், பேரறியாக்கதைக்குமுண்டாயினஙியாயமேமரபுதெரியாக்கதைக்கு முண்டாயிடுதல் மரபாகவும், இதனைவிபரீதப்படுத்தி அம்மரபுதெரியாத அடியார்களைத் தூஷணைக்குள்ளாக்கி, அத்தூஷணுரோபிதம் சேக்கிழார்சங்கற்பித்தது என்று அவர்மேலுந்தூஷணையேற்றிச் சைவவரம்புகடந்தார்பேசுஞ்சழக்குரைகேவலமஸங்கதமென்றறிக. இனிச்சேக்கிழார் தெரியாமல்விட்டாரென்றால், அவ்வருளாளரைத் தூஷித்ததாகாதோவெனின், சேக்கிழார்நூலை நன்கு ஆராய்ந்த சைவப்பெரியோர் அச்சேக்கிழார்பெருமானது நூலிற்றானே மரபுதெரியாக்கதை, ஊரறியாக்கதை, பேரறியாக்கதைமுதலியன கண்டுகூறினராகையால், அங்ஙனந்தெளிந்துகூறியது தூஷணையாகாதெனக. ஸ்ரீநடராஜபதி ஸ்ரீசேக்கிழார்சுவாமிகளுக்கு "உலகெலாம்" என்று முதலெடுத்துக்கொடுத்தாராகையால், திருவருட்பூரணவெள்ளத்தின் மூழ்கிய அவருக்கு அறியாமையைக் கற்பிப்பது கூடாதெனின், "உலகெலாம்" என்று ஸ்ரீநடராஜபதி முதலெடுத்துக்கொடுத்தது சத்தியம். அதனால், ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் முற்றுமுணர்ந்துரைத்திடல்வேண்டுமென்பது கூடாது. ஸ்ரீசேக்கிழாரையதிட்டித்து எவ்வளவு உலகுக்கு உணர்த்துதலாவசியகமோ அவ்வளவு உணர்த்தியது திருவருளென் றறியத்தக்கது. பிறவான்றோரைக் கொண்டு தெரிவித்திடவு மத்திருவருளிசைந்தமையால், சிறிதுவிஷயங்களை அப்படியும்விளக்கியதென்றறிக. ஸ்ரீமத்அப்பர்சுவாமிகள் தேவாரத்திருமுறைகளை யோதியருளினராகவும், அவ்வளவினிறுத்தாமல் ஸ்ரீஜ்ஞானஸம்பந்தப்பெருமானர்-ஸ்ரீவன்றொண்டப்பெருமானர் ஆகிய வெம்பெருமக்களும் அத்தேவாரத்திருமுறைகளையோதியருள வத்திருவருளிசைந்தவாறென்னை? அவ்வளவிலுமமையாமல் திருவாசகம் - திருவிசைப்பா-திருப்பல்லாண்டுகளையும், மற்றத்திருமுறைகளையும் உலகுக்குபகரித்தது அத்திருவருளேயன்

ன்றே? இனி ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணஞ்செய்தருளியபோது அப்பெருந்தகையாருக்குச் சோழர்பெருமான் திரவியங்கொடுத்துச் சாதகப்படுத்தியவா றென்னை? 'செப்பரியதிரவியமுங்கொடுக்கவாங்கிச் சேக்கிழார்குரிசிறிருந்தில்லைசேர்ந்தார்,, என்பது பிரமாணமாய்நின்றவாறறிக. 'செப்பரியதிரவியம்,, என்றதனால் மிகுந்ததிரவியம் என்று வெளியாகின்றது. இப்பெருநிதியைச் சேக்கிழார்பெற்றது யாதினுக்கு? அரசவள்ளல் பரிசளித்தாரென்னலாமோ? பரிசுபெற்றுக்கொண்டு ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் புராணஞ்செய்தாரென்றிடறகுமோ? அதவா பரிசு பெறுவதானாலும் புராணம் முடிந்தபின்னரன்றே அமையும்? புராணமுடிந்தபின்னர் யாதேனும்பரிசுபெற்றதாகச் சொல்லப்பட்டதோவெனி லஃதொன்றுமில்லை. புராணமுடிந்தபின்னரெமது சேக்கிழார்பெருந்தகையை அரசவள்ளல்பணிந்து பாராட்டியவருமை பின்வாக்கியத்தால் வெளியாமென்க.

"செறிமதயானைச்சிரத்திற்பொற்கலத்தோடெடுத்துத்
திருமுறையையிருத்தியபின்சேவையர்காவலரை
முறைமைபெறவேற்றியரசனுங்கூடவேறி
முறைமையினாலிணைக்கவரிதுணைக்கரத்தால்வீச
மறைமுழங்கவிண்ணவர்கள்கற்பகப்பூமாரி
மழைபொழியத்திருவீதிவலமாகவரும்போ
திறைவர்திருவருளைநினைந்தடலரசர்கோமா
னிதுவன்றோநான்செய்ததவப்பயனென்றிசைத்தான்,,

என்னுமிதனை யுய்த்துணர்வார் சோழர்பெருமான் சேக்கிழார்பெருமானுக்குத் திரவியங்கொடுத்தனுப்பியது அவருடைய சொந்தச்செலவின்பொருட்டென்று யோசிக்க இடமில்லை. ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் தமதுபுராணத்தை யொருவருடகாலவளாயின் முடித்தாராகையால், அப்போது அவருக்கு ஸாதகமாகப் பலபண்டிதர்கள் பல்தலங்களுக்குச்சென்று பலவிஷயங்களையறிந்துவந்து அவ்வப்போது தெரிவித்திருக்கலாம். அவர்களுபயோகத்துக்கா

கவே சோழர்பெருமான் திரவியஸாதகமியற்றினரென்க. இவ்வாறுகோடலன்றிச் சேக்கிழார்சுவாமிகளுக்குச் சோழர்பெருமான் பணங்கொடுத்துப் புராணம்பாடச்செய்தாரெனல் கேவலம்அஸம்பாவிதமென்க. இவ்வுண்மைகளைக் கூர்ந்துயோசிக்கும்ஸாதுக்கள் சேக்கிழார்கூற்றதை வேறுநூலாலங்கீகரிப்பது யாங்ஙனமென்று வாதிடுவோரது மதத்தை அறியாதார்கூற்றெனவொதுக்கப் பின்னிடையாரென்க. இதுகாறுங்கூறிவந்த நியாயங்களால் ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் திருவாக்காலும், வேறுவாக்குகளாலும் எமது அப்பனாகிய ஸ்ரீஞாநஸம்பந்தப்பெருமானைப் பரமபதியெனவும், ஸ்ரீமுருகக்கடவுளது அவதாரமெனவும் இந்த நூலுக்குப் பிரமேயமாக யாம்தேடியவிஷயம் இனிதுசாதிக்கப்பட்டது.

இவ்வமலதேசிகமூர்த்தியை "சராசரங்களெல்லாஞ் சிவம்பெருக்கும்பிள்ளையார்" என்று ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் விதந்தோதினராகையால், அதனைத் தெளிந்தவாறு "மான் முதலாகுஞ் சரவசரங்கள் சிவம்பெறவளிக்குஞ்சைவனே" என்று யாமுந்துதித்து மகிழ்ந்தாமென்க. இவரதுவழிபாடு போகம்மோக்ஷங்களைப் பயப்பனவென்பது "உறவும்பொருளுமொண்போகமுங்கல்வியுங்கல்வியுற்ற- துறவுந்துறவின் பயனுமெனக்குச்சுழிந்தபுனற்-புறவும்பொழிலும்பொழில்சூழ்பொதும்புந் ததும்பு வண்டி - னறவும்பொழிலெழிற்காழியர்கோன்றிரு நாமங்களே," என்றருளிய நம்பியாண்டார்நம்பிகள் திருவாக்கால் வெளியாகியதுணர்க. இவரை விஷ்ணுமுதலியோர் வழிபட்டார்களென்பது சீகாழிமாங்மியத்தால் வெளிப்பட்டவாறறிக. அதுவருமாறு:

"செம்மைக்கருணைக்கடலனையான்றிருமுன்னின்றோர்தமைநோக்கி
யெம்மைத்தலங்கடோறும்பதிகத்தேத்துஞானக்கவுணியனை
யம்மைப்பொலஞ்செய்விம்பத்திலாவாகநஞ்செய்தெந்நாளு
மும்மைப்பயன்பெற்றுலகுய்யமுதுபூசனைநித்தியமியற்றி"

"நிகழ்சித்திரைபங்குனிமாதநிறையாதிரையும்வைகாசிப்
பகர்மூலத்துமாவணியைப்பசிமாதஞ்சேர்சதயத்து
மகரமதியிற்கதிர்மதியமருவுநாளுமிதுனமதி
திகழவருரோகணியுமென்றேழ்தினத்துநைமித்தியமியற்றி"

"புரையில்கேள்வியிமையோர்காள்புகல்பங்குனியிற்சதயத்தி[தித்
னிரைசெய்மணிப்பூங்கொடியேற்றிநெடுமான்றேர்நாடேர்நடத்
திரைசெய்தீர்த்தமாதிரைநாடிளைத்தாடுதிரென்றருள்செய்ய
வரைவிலமராண்டுதொறுமகிழ்ந்திவ்வாறுவணங்கினரால்"

இந்தவாக்கியங்களால் பிள்ளையாருக்குத் தேவர்கள் நித்தியபூசை நடத்தினார்களெனவும், சித்திரை - பங்குனி மாதங்களில் திருவாதிரைநட்சத்திரத்திலும், வைகாசிமாதத்தில் மூலநட்சத்திரத்திலும், ஆவணியற்பசிமாதங்களில் சதயநட்சத்திரத்திலும், தைமாதத்தில் அமாவாசைத்திதியிலும், ஆனிமாதத்தில் ரோகணிநட்சத்திரத்திலும் நைமித்தியபூசை நடத்தினார்களெனவும், பங்குனிச்சதயத்திற் கொடியேற்றியும், மிருகசீரிடத்தில் தேரோட்டியும், திருவாதிரையில் தீர்த்தங்கொடுத்தும் பிரம்மோத்ஸவம்நடத்தினார்களெனவும் பெறப்பட்டவுண்மையறிந்தவர்கள் எமது ஞானசம்பந்தபதியைப் பசுவர்க்கத்திற்படித்துப் பாவத்திற்கு மடிகட்டிக்கொள்ளுவார்களோ? கொள்ளார்! கொள்ளார்!! இஃதுணராத சிலமூடர்கள் தாங்கள் ஸம்பிரதாயமாயாவுமுணர்ந்தவர்களாக வெண்ணிக்கொண்டு நால்வர்களுக்குக் குருபூசைநடத்தவேண்டியதேயன்றித் திருக்கோயில்களில் மஹோத்ஸவம் நடத்தக்கூடாதென்று வீண்பூசலிட்டு வெதும்புகின்றனர். இவர்கள் தங்களை யுயர்ந்த சைவர்களென்று எண்ணிக்கொண்டிருப்பவர்கள். அன்றியும், தங்களுக்கு இரண்டுமூன்று தீக்ஷைகளாயிருக்கிறதென்றும், தாங்கள் பூசையெழுந்தருளப்பண்ணிக்கொண்டவர்களென்றும் அகங்கரித்து மெய்யன்பினர்களாகிய ஸாதுக்களை அற்பமாகப்பேசித்திரிபவர்கள். இவர்களுடையஅநாசாரமோவெனின், ஐயங்காரதுகால்களில் ஆசையோடுவி

பூவார்கள். அவர்களது பெருமாள்கோயில்களுக்குப்போய் மாலைமரியாதைகளுக்கு மண்டையுடைத்துக் கொள்வார்கள். சடகோபம் தங்கடலையில் முதலில்வைக்கவில்லையென்று சண்டைபிடிப்பார்கள். ஸ்மார்த்தவேதியரை அதிக பூஜ்யராகமதிப்பார்கள். சைவவேதியர்களைச் சாமான்யராயெண்ணுவார்கள். இத்தகையவசட்டுப்பிணங்களும், இவர்களுக்குத் துணைபோந்த சிலபடித்தமூடர்களும் எமது பரமாசாரியர்களது மஹோத்ஸவங்களைக் குறைகூறுவது ஒரு பொருளாகாதென்க. இதுநிற்க. உண்மையுணர்ந்த ஸாதுக்களாங்காங்குப் பரமாசாரியர்களுக்கும், நாயன்மார்களுக்கும் மஹோத்ஸவங்கள்புரிந்து அன்புபாராட்டி வருகின்றார்கள். இவ்வன்பாளர்கள் கவனிக்கத்தக்க சிலவிஷயங்களை யீண்டுக்கூறுகின்றோம்.

1. அறுபத்துமூன்றுநாயன்மார்களைத் தனித்தனி நாம்பிரஸ்தாபிக்கையில் நாயனர் - நாயனர் என்று கூறுவதுபோல ஆசாரியர்கள் நால்வர்களைத் தனித்தனிப்பிரஸ்தாபிக்கையில் நாயனர் என்றுகூறுவது கூடாது. சுவாமிகள், மூர்த்திகள் என்று துதித்திடல்வேண்டும்.

2. ஆசாரியமஹோத்ஸவங்களை அறியாதார்சிலர் பக்தோத்ஸவம் என்று கூறுகின்றார்கள். அவ்வாறுகூறுதல் கூடாது. ஆசாரியமஹோத்ஸவம் என்று கூறுதல்வேண்டும்.

3. ஆசாரியர்களது திருநட்சத்திரபூசையைக் குருபூசையென்று வழங்குதல் கூடாது. ஆசாரியகுருசப்தங்களொரே பொருளைத்தரினும், குருசப்தம் பூசையோடுசேர்ந்தபோது சாதாரணபண்டாரங்களது குருபூசையிற் பரிவஸாநத்தையடைகின்றது. அன்றியும், அந்தக் குருபூசையென்னும் வழக்கு இறந்தவர்களைநோக்கிச் செய்யும் வருஷாப்திக பூசையிலேயே சென்றுமுடிகின்றது. ஆசாரியர்கள் பூமியிற் பிறந்திறந்தவர்களல்லவாகையால், அவர்களதுபூசையைக் குருபூசையென்றிடல் தகாதென்க. இனி அவர்களதுபூசையை ஆசாரியபூசை, ஆசாரியமஹோத்ஸவம் என்று கூறுதலே அமைவுடைத்து,

4. ஆசாரியர்கள்நால்வரும் ஆளுடையார் என்று பிரசித்திபெற்றிருக்கின்றார்கள். இவர்களைத் தனித்தனிக்கூறுகையில், ஆளுடையபிள்ளையார்-ஆளுடையவரசுகள் - ஆளுடையநம்பிகள்-ஆளுடையவடிகள் என்றுதுதிப்பது மரபாயினதறிக. இவ்வாளுடையார் என்னும்விசேடம் ஏனை நாயன்மார்களுக்குயாண்டும் படிக்கப்பட்டதில்லையெனவறிக. ஆகையால், பரமாசாரியர்களையும், ஏனையவர்களையு மோரினப்படுத்துதல் அஸம்பாவிதமேயாம்.

5. ஆசாரியர்கள்நால்வர்களை வீரசைவர்களும், ஸ்மார்த்தர்களும் தங்கடங்களாசாரியர்களாகக்கொண்டு வழிபடுகின்றார்கள். அதை நாம் விரோதிக்கவேண்டியதில்லை. எப்படியாவது நமது பரமாசாரியர்களைப் பிறரும் வழிபட்டு க்ஷேமமடையட்டும். திருநாவலூரி லெழுந்தருளியிருந்த ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகளே இப்போது இராஜமன்னார்கோயிலி லெழுந்தருளியிருக்கும் பெருமாளென்றறிக. இதனுண்மையறியவேண்டின், திருவாரூரிலெழுந்தருளியிருக்கும் சுந்தரமூர்த்திசுவாமிகளையும், ஷ இராஜமன்னார் கோயிலிலெழுந்தருளியிருக்கும் மூர்த்தியையும் போய்ப்பார்த்துமகிழலாம். இப்படி நேராதபோது பாஞ்சராத்திரிகள் நலமடைவதுதான் எப்படி? இப்படியேயன்றோ திருவேங்கடம்-பழமுதிர்சோலை-வில்லிபுத்தூர்முதலிய பலதலங்களில் முருகக்கடவுள்மறைந்திருந்து பாஞ்சராத்திரிகளுக்கு நலத்தைச் செய்தருளுகின்றனர்?

இன்னுமித்தகைய பலவமிசங்கள் நாம் கவனிக்கத் தக்கவையுள. அவற்றுள், யாம் முதற்கண் ணெடுத்துக்கொண்ட "நாயனார்,, என்னுஞ்சொல்வழக்குக் கற்றுணராதார் கூற்றாயி னொருவாறொதுக்கிவாழலாம். கற்றவர்களேமயங்கிக் கூறுகின்றமையா லதனைச்சிக்கறுத்திட லாவசியகமாகத்தோன்றி யீண்டிதனை யெழுதப்புகுந்தாமென்க. என்னெனின், சிவஞானயோகிகளது பிரபந்தத்திரட்டை அச்

சிட்டுவெளிப்படுத்திய மதுரை-இராமசாமிப்பிள்ளையென்பவர் அந்தப் பிரபந்தத்திரட்டுடன்சேர்த்து வெளிப்படுத்திய உலகுடைநாயனார் பிரபந்தத்தில் "என்னையு முனையும்" என்னும் பாடலில் "கன்னலங்கழனிக் காழிமாநகரிற் கவுணியனிரண்டுஞானமுமே, கற்றிடாதுணர," என்னும் பகுதியைச்சுட்டி அதற்குத் தாம்கொண்டபொருளை விளக்கியிருக்கின்றார்.

அதுவருமாறு:

"கன்னலங்கழனிக் காழிமாநகரிற் கவுணியனிரண்டுஞானமுமே," கற்றிடாதுணர," என்றருளிச்செய்திருப்பதால், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்திலே, "சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம், பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞானம், உவமையிலாக்கலைஞான முணர்வரியமெய்ஞ்ஞானம், தவமுதல்வர்சம்பந்தர் தாமுணர்ந்தாரங்கிலையில். "என்ற செய்யுளிலே கூறியருளியஞானம் இரண்டேயெனக்கொண்டு, திருத்தணிகைப்புராணநூலுடையார் "மேவருஞான மிரண்டவற்றொன்று விமலனார்பாததாமரையே, ஓவறுமன்பினுணர்திருவளிக்கு மொப்பிலாவுயர்கலைஞானம், தாவரும்பவத்தைவேரொடுங்களையுந் தக்கமெய்ஞ்ஞான மொன்று," என அந்நுவயஞ்செய்து கூறியருளினார்,"

இந்தப் பிரசங்கத்தி லிவர் 'திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணத்திலே,' என வொன்று வரைந்திருக்கின்றனர். இவரும், இவருக்குத்துணைப்போந்த பண்டிதர்களும் ஆளுடையபிள்ளையார்முதலிய தேவாரகர்த்தர்களை நாயனார் என்பதேயன்றித் திருவாசகமூர்த்தியை நாயனார் என்பதில்லை. திருவாசகமூர்த்தியைச் சுவாமிகள் என்று கூறுகின்றார்கள், மூவர்முதலிகளை யாண்டும் சுவாமிகளென்று கூறார்கள். இதற்குக்காரணந் தெரியவில்லை. அறுபத்துமூன்றுநாயன்மார்களில் மூவர்முதலிகள் சேர்ந்திருப்பதால் அவர்களை நாயனாரென்பதும், அவ்வறுபத்துமூன்றுநாயன்மார்களில் வாதவூரடிகள் சேராமையால் அவரை நாய

...ாமையு மமைதல்கூடுமென்று அவர் ... கூடாது. ஏனெனின், வாதவூரடிகள் பு... ல், "நாயனுரவடன்னைநீயொல்லையிங்கழையென்ன" என்று கூறப்பட்டிருக்கின்றது. அறுபத்துமூவருட்சேராத திருவாசகப்பிரானைக் கடவுண்மாமுனிவர் நாயனுர் என்று கூறியது என்னை? அவ்வறுபத்துமூவருட்சேர்ந்த மங்கையர்க்கரசியார் - காரைக்காலம்மையார்-இசைஞானியார் ஆகியமூவர்களையும் தனியேயெடுத்துப் பிரஸ்தாபிக்கையில் எத்தகைப்பெரியாரும் நாயனுர்என்று வழங்காததென்னை? இம்மட்டோ, அறுபத்துமூவருட்சோாத உலகுடையாரை உலகுடைநாயனுர் என்றிந்த மதுரைக்கவிராயரேயெழுதியவாறென்னை? அறுபத்துமூவருட்சோாத உய்யவந்ததேவரை உய்யவந்ததேவநாயனுர் என்று சைவப்பெரியார்யாவரும் வழங்கிவருமாறென்னை? இப்படியே அறுபத்துமூவருட்சோாத திருவள்ளுவரைத் திருவள்ளுவநாயனுர் என்று எல்லாச்சமயத்தவருங்கூறிவருவதென்னை? இவற்றைத்தெளிந்திடாத அம்மதுரைப்பிள்ளையார் ஸ்ரீவாசகப்பிரானை மாணிக்கவாசகசுவாமிகள் என்று கூறுவதுபோல் ஞானசம்பந்தப்பெருமான்முதலிய மூவர்களைச் சுவாமிகள் என்றுகூருமைக்கும், மாணிக்கவாசகசுவாமிகளை நாயனுர் என்று கூறுவதற்கும் தக்கநியாயங்காட்டாமல் அந்தப்பரம்பரையாய் (இஷ்டவிகாதம்பண்ணிக்கொள்ளாமல்) எழுதுவாரினத்திற்சேர்ந்துமதிமாழாந்தது பரிதாபமென்க. இனிப் பரமாசாரியர்நால்வர்களையும் சுவாமிகளென்று துதிப்பதே பண்டைக்காலந்தொட்டு ஆன்ரோநுஷ்டானத்தில் வந்தவழக்காமென் றறிக. அவர்களை நாயனுர் என்பது செய்யுள்வழக்கின்மாத்திரமே கனம்பெறுமென்க. சேக்கிழார்சுவாமிகள் சிவபெருமானைத் தமது திருமுறையில் நாயனுர் என்று பலவிடங்களிற் பிரஸ்தாபித்தாரென்பதுகொண்டு அச்சிவபிரானைச் சம்புநாயனுரெழுந்தருளினுர்

சங்கரநாயனுர் வீற்றிருந்தார், நீலகல
ருளினர், மகாதேவநாயனுர் மணந்தரு
வழங்கிவருதல்கூடுமோ? இவற்றை நோக்கினு து
காழிப்பெருந்தகையைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனு
ரென்று பூர்வபட்சியார்பிரஸ்தாபித்தது வாய்க் குமட்டலை
யேயுண்டுபண்ணுமென்றறிக. இனி அறுபத்துமூன்றுநாய
ன்மார்களையாவது தனித்தனிப்பிரஸ்தாபிக்கையில் நாயனு
ரென்றுசொல்லவேண்டுமென்பது ஆவசியகமோவெனின்,
கண்ணப்பசுவாமிகள், அப்பூதியடிகள், குலச்சிறையடிகள்,
நீலநக்கவடிகள் என்று பிரயோகங்களுண்டாகையால், ஆ
சங்கைவிட்டதென்க. அன்றியும், நாயனுர் என்பது தமிழ்
ச்சொல். இதனையே கையாளவேண்டுமென்னும் வாதம்
(கீர்வாணம், கன்னடம், தெலுங்கு முதலிய பாஷைகளிற்
பயின்று) திருத்தொண்டர்களிடத்திலும், ஆசாரியர்க ளிட
த்திலும் அன்புபாராட்டத்தக்க ஸாதுக்களதுஸதவில் எங்
ஙனேகனம்பெறும்? இவர்களது மான்மியமாகிய பெரிய
புராணத்திற்கு ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் திருத்தொண்டர்
புராணம் என்றுபேரிட்டதேயன்றி நாயன்மார்புராணம் எ
ன்று பேரிட்டதில்லை. இவைகளையெல்லாங் கூர்ந்துயோசி
த்து நமதுமதுரைக்கவிராயரும், அவர்போன்று மயங்கிக்
கூறுமற்றையருந் தமது அஸம்பாவிதங்களை யொழித்து
உண்மைகடைப்பிடித் தொழுகுவாராக. இதுநிற்க.

இம்மதுரைக் கவிராயர் உலகுடைநாயனுர் பிரபந்
தத்தில் "என்னையுமுனையும்," என்னும்பாடலைப் பிரஸ்தாபித்
து, அதிலவர்கண்ட இரண்டுஞானங்களையே "சிவனடியே
சிந்திக்கும்," என்னும்பாடலில் ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் பிர
காசப்படுத்தினரெனத் தமது திறமையைக்காட்டி மகிழ்ந்
தாராகையால், அதனையுங்கொஞ்சம் ஈண்டுவிசாரித்துமுடி
வுசெய்வாம். உலகுடைநாயனுர்பாடலில் "கவுணியர்பிரான்

டுஞானமுமே - எ[torn]ன்று இவரெழுதியது பாட
மன்று. "கவு[torn]ஞானமுமே-கற்றிடாதுணர," என்பது
எமக்குப்பாடம். இதற்கினி யிவரென்செய்வார்? அதவா
இவரதுபாடத்தையே யாமொப்பினும், அதற்கு யாம் கூறு
ம்பொருளை யீண்டறிவிப்பாம். எங்ஙனமெனின், "கவு
ணியன் - கவுணியர்பெருமான், இரண்டு ஞானமுமே-இர
ண்டுஞானங்களையுமே, கற்றிடாது-கல்லாமல்,உணர (அவ்
விரண்டற்கும் வேறாகிய நான்குஞானங்களையே) உணர்
ந்திட," என்று கொள்வதேயாம். தெரியாதார் ஞானமிர
ண்டேயெனக்கூறியதை அவர் மறுத்தாரென்பதே யீண்
டமைந்தது. இன்னு நமது மதுரைப்பிள்ளையின் மயக்
கவுரையை யநுசரித்தே யீண்டுச் சிலவரைவாம். உல
குடைநாயனார் தமதுபாடலில் கவுணியர்பெருமானுக்கு
இரண்டுஞானத்தைக் கூறியதேயன்றிச் சேக்கிழார்பெருமா
ன் அவருக்கு இரண்டுஞானத்தையே கூறினாரெனவும், நா
ன்குஞானத்தைக் கூறியதின்றெனவுந் தெரிவித்தாரில்லை.
அச்சேக்கிழார்பெருமான் "ஏகமாஞ்சிவமெய்ஞ்ஞானமிசை
ந்தவர்;" என வேறோரிடத்திற் கவுணியர்பெருமானைப் பிர
ஸ்தாபித்திருக்கின்றனர். இதன்முன்னர் "கவுணியனிர
ண்டு ஞானமுமே கற்றிடாதுணர" என்று நமது மதுரைப்
பிள்ளைதேடிய பிரமாணம் என்னையது? ஆயின், நீர் நான்கு
ஞானமென்ற திழுக்காதோவெனின், "ஏகமாஞ்சிவமெய்ஞ்
ஞானமிசைந்தவர்" என்றவிடத்தில் யாம் நான்குஞானம்
கூறகில்லேமென்க. சிவஞானம் - பாங்கினிலோங்கியஞா
னம்-கலைஞானம்-மெய்ஞ்ஞானம் எனநான்குமுறை விதந்த
ஞானத்தையே யாம் நான்குஞானமெனக் கொண்டாமெ
ன்க. இடத்துக்கேற்பப்பொருள்விரிப்பது பண்டிதர்களுக்
கு மரபாமேயன்றிப் புத்திவிகற்பித்தெழுந்தவாறெல்லாம்
பொருள்விரிப்பது அநாதரணியமாயினவாறறிக. யாம் கூ
றிய நான்குஞானங்களைக் "கேட்டலுடன்சிந்தித்தறெளிதனிட்

டை இளத்தலெனவீரிரண் ... ம்,, எனச் சிவ
நீலகல ...
ஞானசித்தியாரிலும் "தெரிவாய ... தங்கேட்டல் சிந்தித்தறெளிதலுயர்நிட்டையென்றே,, எனச்சிவஞானதீபத்திலும் விளக்கியிருத்தல் கண்டுதெளிக. ஞானம்நான்கு என்பதற்குப் பிரமாணமுண்டாகாதபோதன்றோ யாம் சேக்கிழார்திருவாக்கிற்கொண்டபொருள்பிழைபட்டொதுங்கும்? சிவஞானபோதமுதலிய சித்தாந்தநூல்களில் ஞானத்தைக் கூறவந்த எட்டாஞ்சூத்திரத்திற்றானே கேட்டலாதிநான்கு ஞானங்கள் பிரதிபாதிக்கப்படுதலால் யாம்கொண்டபொருளே அமைவுடைத்தாதலறிக. சேக்கிழார்திருவாக்கில் ஒருஞானம்-நான்குஞானம் பெறப்பட்டவாறு இரண்டுஞானம் பெறப்பட்டிருந்தால், அந்தப்பகுதியைத்தேடி அதற்கு நமதுமதுரைப்பிள்ளை தமதிருஞானத்தை யொப்படைத்துப் புகழ்பெறுவாராக. அப்படியொன்று கிடைக்கப்பெறின், அதனை யாம்புகழ்வதன்றி யிகழகில்லேமென்க. அதனைவிடுத்துச், "சிவனடியே ,, என்னும்பாடலில் அவர் திருஞானம்பயன்பட முயல்வது விழலுக்குமுத்துலைபோட்டதாகவே முடியுமென்றறிக. இவர்கூறும் பரம்-அபரம் என்னுஞானங்களை யாம் அசாஸ்திரீயமென் றொதுக்குவதுமில்லை. அவை "சிவனடியே ,, என்னும் பாடலில மையாவென்பதே யெமதுதுணிவு. ஞானம் ஒன்றெனவும், இரண்டெனவும், மூன்றெனவும், நான்கெனவும், ஐந்தெனவுங்கூறும் நூல்வழக்குகளுண்மையால்,எல்லாஞானங்களு மிடத்துக்கேற்றவாறு அமையுமென்பதேசித்தம். யாம் "சிவனடியே ,, என்னும்பாடலிலன்றி வேறு இடங்களில் இரண்டுஞானத்தை மறுத்திலமாகையாலும், நமது மதுரைப்பிள்ளை நான்குஞானத்தை அறவே மறுக்கின்றமையாலும் இரண்டுஞானத்தைக் கூறுநூல்களை யாம்விரோதியாமையும், நான்குஞானத்தைக் கூறும் பெரியபுராணம் - சிவஞானசித்தியார் - சிவஞானதீபமுதலியவைகளை

அவர் விரோதித்தன[...] பெறப்பட்டுப் பூர்வபட்சியினது சைவநலம் புண்பட்டவாறறிக. இனிப் பிள்ளையாருக்கு நான்குஞானங்களைக்கூறிய சேக்கிழார்பெருமான் வேறோரிடத்தில் ஒருஞானத்தைக்கூறியது விரோதமாகாதவாறுபோல அப்பிள்ளையாருக்கு உலகுடையநாயனார் இரண்டு ஞானங்கூறியதும் விரோதமாயினதில்லையென்பதே முடிவென்றறிக. இவ்வாறுதெளிந்து குணப்படாமல் "சிவனடியே" என்னும் பாடலின்கருத்தையே அவ்வுலகுடைநாயனார் கூறினாரென்வாதிடல், "கொடிறும்பேதையுங் கொண்டதுவிடாது" என்பதனோடுதானே சேர்ந்தழியுமென்க. இதுநிற்க.

இந்தக்கவிராயர் திருத்தணிகைப்புராணநூலுடையார் "மேவருஞானமிரண்டு" என்று சேக்கிழார்திருவாக்கை விளக்கினாரென வொன்றுகூறினாராகையால், அதனையுஞ் சிறிது யோசிப்பாம் இந்தவிஷயத்தி லெம்மோடெதிர்த்திளைத்தவர் பலர். அவருள், ஞானபேத விளக்கச்சூருவளியெழுதினவரும், ஞானசூடாமணி வெளியிட்டவரும் பின்னர்த்தெளிந்து எமது நட்பைவிரும்பி மகிழ்ந்தார்கள். அவர்களுக்குக்கூறியவிடையில், சிலபாடல்களை யீண்டுவரைகின்றாம்.

" சேக்கிழார்கருத்தைச்செப்பினர்தணிகைச்சீர்புராணத்தி
லென்றிசைத்துச், சிரிக்கவேயெடுத்தாருடம்பினையந்தோ செப்பி
யேயிரண்டையுமொன்று, யாக்குமாறெங்ஙனிரண்டுமோர்விடய
மறைவதற்கெழுந்திலவதனு, லாகுமோவொன்றற்கொன்றிடமாக
வன்றியுஞ்சேக்கிழார்கருத்தை, நோக்கியேயுரைத்துமென்றிறையே
னுநுவன்றனரோவெனிலில்லை, நூலறிவுடையதம்பிரானிந்தநுட்ப
மோர்ந்தவர்த[...]ன, வீக்கியபாசவினைவயப்பட்டுமெய்யறி
விழந்தாவ[...]பகர்வாரெம்வினையெலாமாற்றும்வெங்
குருமேய[...]

" அகத்தியன்றனக்கோத்தல... ...முருகனறைந்தவாகூறு
மந்தணிகை,யம்பதிக்கானமெய்ப்புராணதலதன்பினுண்டாகுமோ
ர்சரிதை, யகத்துளதொன்றைப்பொருத்துதலெங்ஙனகுமோவிதும
தியிழந்தோர்க், காவதொன்றல்லால்வேறிலையதனுலம்மைஞானத்தி
ருமுலைப்பான், மிகுத்துறவயின்றஞானமாமணியேவியக்குமின்சரி
தையிற்போந்து, விளங்குமோர்விடயந்தன்னையேயெடுத்துவிளக்
கினர்முற்புராணத்திற், செகத்தினிற்பெரியோரென்றிடறகுமோ
தெய்வகுஞ்சரியொடுகுறப்பெண், சேர்ந்துவாழ்தணிகைச்செம்ம
லேயெங்கள்செல்வமேசின்மயவொளியே,,

"மூலமுமதற்காமொழிபெயர்ப்பொன்றமுரணுதலின்றியே
விளங்கல், முக்கியமாகுமுதல்கெடவாங்குமுரணுதன்முக்கியமன்
றும், சாலவீங்கிதனைத்தெளிந்தபேர்ஞானசம்பந்தர்காதையைக்கொ
டுபோய்ச், சாற்றிடுகும்பமுனிக்கிசைத்திடுதறக்கதென்றேற்றிலர்த
ணிகை, மூலநூலதனிற்பிள்ளையார்ஞானமொழிந்துளதோவிலைய
தனுன், மொழிபெயர்ப்பதனிற்கூறுதலெவனேமூடர்கூற்றீதென
மொழிந்தாய், ஞாலமீதினில்வந்தெமக்கருள்பூத்தநாயகமேதிருத்த
ணிகை, நற்பதிமேவும்வள்ளலேகாழிஞானனேமோனதேசிகனே,,

என்னுமிவை பூர்வபட்சியாரதுநோய்க்கு யாம் தந்
த ஔஷதமாய்ச்சிறந்தமையா லிம்மட்டிலிதைநிறுத்தி வே
று சிலவீண்டுக்கூறுவாம்.

இந்த மகாபண்டிதரோடிணங்கிய நண்பரொருவர்
பூர்வம் "மெய்ஞ்ஞானபானு,, என்றொருசுவடி வெளியிட்ட
னர். அதிலதனையாக்கியோர் ஞானம் இரண்டென்பதை
மறுத்துஞானம்நான்கேயெனச்சாதித்திருக்கின்றனர்."சிவ
னடியே,, என்னும்பாடலில் தெளிதலிற் சிறிதுபாகமும்,
நிட்டையும் பெறப்பட்டனவாக அந்தநூலாசிரியர் கூறின
தன்றியும், பிள்ளையாரது முற்சநநத்திற் கேட்டல்- சிந்தித்
தல் - தெளிதலினதிகபாகங்களை அவரடைந்தாரெனவுங்
கூறினராகையால், அவருக்கு இரண்டு... ...னங் கூறுதலுட
ம்பாடன்றெனல் சித்தமாயிற்று. ... ...கு முற்சந
நமுண்டென்று அவர் கூறியதை ... ...ானசதிஷ்

டயதர்ப்பண த்தில் வெட்டிச்சாய்த்தோம். இனியவர் கேட் டவைகளை ஞாளமென்றதனையே யீண்டியாம் தழுவநேர்ந்தது. இம்மதுரைச்சங்கவித்வானையேனோ மறுத்திலர் மதுரை இராமசாமிப்பிள்ளையார்? "மெய்ஞ்ஞானபானு,, விஞக்கியோரி லிவரந்தரியாமியாயிருந்தமையான் மறுதுடனெழுகிவாழ்ந்தார்போலும். இவரந்தரியாமியாயிருந்தபோது நான்குஞானமும், அப்புறப்பட்டபோது இரண்டுஞானமுமிவருக்குடம்பாடாகியது ஆச்சரியமென்க. இனியுமிவ்வாறுகலங்கிக் காலங்கழியாது சித்தியாரைத்துணைகொண்டு சீர்பெற்றுவாழ்வாராக. இந்தஞானவிஷயத்தை விஸ்தாரம ... லநூல்களிற் பிரகாசப்படுத்தியிருக்கின்றோம். ... ஈண்டிவ்வளவினிறுத்தி யுபசாந்தியடைந்தா ...ம்.

இதுகாறும் யாம்பிரகாசப்படுத்திய வுண்மைநியாயங்களால் ஞானஸம்பந்தப்பெருமானது பரதத்துவநிலைமை நன்குபுலப்பட்டமையால், பூர்வபட்சிகளது துர்மதம் மூலதோஹானியாயினதறிக. இவ்வுண்மையுணர்ந்தவர்கள் அமண்கரந்துறையுஞ் சைவப்போலிகளது பொய்ப்போதத்திற்பட்டுமயங்கிக் கெடார்களாகையால், ஸ்ரீ-ஞானஸம்பந்தப்பெருமானது திருவருளுக்குப்பாத்திரராகச்செய்யு மிந்த்ஸத்கிரந்தம் ஸாதுக்களுடைய க்ஷேமார்த்தம் உலகில் நீடிவாழ்க. சுபம். சுபம். சுபம்.

## வாழ்த்து.

"வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனுமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே,,

திருச்சிற்றம்பலம்.